# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.


பிரசுரம்] 1943-ம்௵ மேமீ 15௳ [ந. 146


பிரஸங்கம் CXLVI.

## டுனிஸ், பிஸர்ட்டாவின் வீழ்ச்சி.

### டங்கர்க்குக்கு சரியான பதில்.

மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் ஜெனரல் ஈசன்ஹாவருக்கு அனுப்பிய செய்தி.

தாங்கள் வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேசப்படைகளின் தலைவராக இருந்த ஆறு மாதங்களாக, கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் நடைபெற்ற நடவடிக்கைகளை நான் சந்தோஷத்துடன் கவனித்து வந்திருக்கிறேன்.

உங்களுடைய தலைமையின்கீழ், தேசத்தினாலும் மதபேதத்தினாலும் வேறுபட்ட பல விதமான படைகளும் ஒருமைப்பட்டு வெற்றிகரமாக வேலை செய்திருக்கின்றன. அவர்கள் ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். எதிரியின் எதிர்ப்பும், வலுவும், ஊக்கமும் பொருந்தியது. ஆகிலும், டுனிஸியாவையும், பிஸர்ட்டாவையும் நீங்கள் பிடித்துவிட்டதிலிருந்து ஆபிரிக்கா யுத்தம் அனேகமாக முடிவடைந்துவிட்டது.

ஆபிரிக்காவிலுள்ள எதிரியின் பாக்கித் துருப்புகள் கைதி செய்யப்படுகின்றன, அல்லது நிர்மூலமாக்கப்படுகின்றன. டங்கர்க் கணக்கு இப்பொழுது முடிவடைந்துவிட்டது. என்னுடைய ஜனங்களின் சார்பாக, நேசதேசப்படைகளின் தளகர்த்தரான உங்களுக்கும் உங்களுடன் ஒத்துழைத்த எல்லாவிதமான படைகளுக்கும் நீங்கள் வெற்றிபெற்றதற்காக எங்களுடைய மனமார்ந்த சந்தோஷத்தை அறிவிக்கிறேன்.

## ஐரோப்பிய அரணும் விழுந்துவிடும்.

(ஜெனரல் கிராட் பிரெஞ்சு மக்களுக்கு ஒலிபரப்பியது).

டுனிஸையும் பிஸர்ட்டாவையும் பிடித்துவிட்டதால் நேசதேசப்படைகளும் பிரெஞ்சுத் துருப்புகளும் பிரான்ஸின் ரக்ஷணைக்குட்பட்ட பூ பிரதேசத்தில் மகத்தான முதல் வெற்றியைப் பூர்த்தி செய்துவிட்டார்கள். ஜெர்மன் படைகள் தோற்கடிக்க முடியாது என்று சொன்ன பேச்சு பொய்யென்று மறுபடியும் இப்பொழுது ஸ்பஷ்டமாக வெளியாகிவிட்டது.

மே மாதம் 10-ம் தேதியாகிய நாளையதினம் ஜெர்மானியர்கள் பிரான்ஸுக்கு வந்த வருஷாந்திர தினம். 1940-ம் வருஷம் மே மாதத்திலிருந்து 1943-ம் வருஷம் மே மாதம் முடிய, நமது படைகள் தோல்வியுற்று நமது தேசம் அடிமைப்பட்டதும் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டதும் நடந்து மூன்று வருடங்களாயின. அந்த உடன்படிக்கையை நாம் உதறிவிட்டோம். இந்த மூன்று வருடங்களாக பிரெஞ்சு மக்களின் எதிர்ப்பு வலுப்பட்டு உலக மக்களறியும்படியாக பிரெஞ்சு தேசத்தின் ஆன்மா தோற்கடிக்கப்படவில்லையென்றும் வெளிக்காட்டியிருக்கிறீர்கள்.

தேசாபிமானம் என்ற பரிசுத்தமான எண்ணத்தினால் தைரியங்கொண்ட சொல்பமான பிரெஞ்சு சேனையானது யுத்த அரங்கத்தில் தீரமாக நின்று சண்டை செய்திருக்கிறது. இன்றைய தினம் அல்ஜியர்ஸில், நல்ல சூரிய வெப்பத்தில், பிரான்ஸின் ரக்ஷகியான ஜோன் ஆப் ஆர்க் அம்மணிக்கு நன்றி செலுத்த மாதா கோவிலுக்குப் போகும்முன் அமெரிக்கச் சேனையின் தளகர்த்தர் மூன்பாக கவசம் பூண்ட அநேக வண்டிகள் செல்லுவதைப் பார்க்கிறோம். இங்கு சேமிக்கப்படும் தரைப்படையானது யுத்தம் செய்ய பிரியப்படுகிறது. யுத்தம் செய்வதிலும் சாமர்த்தியம் வாய்ந்தது.

உங்களையும், ஜெர்மனியிலுள்ள நமது கைதிகளையும் விடுவிப்பதுதான் அவர்களுடைய முக்கியமான வேலை. எங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றிவிடுவோமென்பது நிச்சயம். எங்களுடைய யுத்த நோக்கம் ஒன்றுதான்—உங்களுடைய ஸ்வதந்திரம்.

இன்னும் சில நாட்களில் ஆபிரிக்காவில் ஜெர்மன் பூண்டேயில்லாமல் செய்துவிடுவோம். ஜெர்மானியரின் உலக சாம்ராஜ்யம் வீழ்ந்துவிட்டது. கொஞ்ச நாளில் ஐரோப்பிய அரணையும் நாம் தாக்குவோம். ஆகிலும் யுத்தமானது கடினமாகவும் வெகு நாட்கள் நடைபெறக் கூடியதாகவுமிருக்கும். ஆகிலும் கவலைப்படாதீர்கள். பழிவாங்கும்படியான காரியங்களை நடத்தாதீர்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 8—5—43-லிருந்து 14—5—43-வரை.

**டுனிஸியா.**—மேமீ 7-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று தலைநகரான டுனிஸும் முக்கிய கடற்தளமான பிஸர்ட்டாவும் விழுந்தன. சனிக்கிழமையன்று அவைகள் ஆக்கிரமிக்கப்பட்டன. இவ்விரண்டு நகரங்களைப் பிடித்த விவரங்களை யுத்தக் குறிப்புகளில் விளக்கியிருக்கிறோம்.

இவைகள் விழுவதற்குமுன் கீழ்கண்ட ஸ்தலங்கள் பிடிபட்டன. கரெக்டெயிக்கல், பால்டு குன்று, கிரீன் குன்று, மாஸிகால்ட், ஜெபல்செனிஷ், ஜெபல் ஆக்கல், ஜெபல்பௌ அகௌஸ், ஸெயிண்ட்ஸிப்ரியான்.

டுனிஸும், பிஸர்ட்டாவும் விழுந்த தினத்தன்று பெர்ரிவில்லாவும் விழுந்தது.

மேமீ 8-ம் தேதிக்குப்பின் ஹம்மாம்லிப், டுனிஸுக்குத் தென்கிழக்கிலுள்ள கிரீட்வில்லி, மெட்ஜாஸ் எல்பாப்புக்கு கிழக்கே தென்கிழக்கில் ஸார்டைர், டுனிஸுக்குத் தென்கிழக்கிலுள்ள எயின்எல் அஸ்கார், பாண்டுபாஸ், மிகர்கா, ஸாகுவான், கார்தேஜ், டுனிஸியாவிற்குக் கிழக்கேயுள்ள லாகௌலத்து, பாண்டுபாஸுக்கு வடகிழக்கேயுள்ள டெபியன்னி, பாண்டுபாஸுக்குத் தென்கிழக்கேயுள்ள மொக்ரானு, டுனிஸியாவுக்குச் சமீபத்திலுள்ள எலாஸித், எலேயா, டெபர்பா, டீடாயிடா முதலிய ஸ்தலங்கள் பிடிபட்டன.

64,000 மனிதர்களும் மூன்று ஜெர்மன் டிவிஷன் தலைவர்கள், அவர்களுடைய வேலை ஆட்கள் உள்பட கைது செய்யப்பட்டார்கள்.

தோல்வியுற்று கதியற்று எதிரி கேப்பான் தீபகற்பத்திற்கு ஓடிவிட்டான். அங்கும் அவன் துரத்தப்படுகிறான். கடைசியாக வந்த தகவல்களிலிருந்து தீபகற்பத்தின் வாயிலுள்ள கிராம்பாலியாவும், ஸாலிமானும் பிடிபட்டன. இந்தப் பிரதேசத்திலிருந்து ஜெர்மன் விமானப்படை பின்வாங்கியது. இதைச் சுற்றிலுமுள்ள பிரிடிஷ் கடற்படைக்குத் தப்பி ஓடும் எதிரியின் கப்பல்களை மூழ்கடிக்கவும், சுடவும், நாசம் செய்யவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. நிலைமை எதிரிக்கு மோசமாயிருக்கிறது.

**ருஷ்யா.**—நொவாரோஸிஸ்க் பிரதேசத்தில் கடும் போர் நடைபெறுகிறது. டானட்ஸ் நதியின் அடி பாகத்தில் லிஸிஸான்ஸ் பகுதியிலும், வால்காவ் பகுதியிலும், ராஸ்டாவுக்கு மேற்கிலும், பாலக்னியா, ஸர்க்ஸ்க், லெனின்கிராட், வெலிகிலூகி பிரதேசங்களிலும் மாறி மாறி சண்டைகள் நடைபெறுகின்றன.

**பஸிபிக் யுத்தம்.**—பிப்ரவரி மாதத்தில் குடால்கனலுக்கு வடமேற்கேயுள்ள ரஸ்ஸல் தீவுகளையும், ஜனவரி மாதத்தில் அலூஷியன் தீவுகளில் ஆம்சிட்கா தீவுகளையும், எதிரியின் எதிர்ப்பன்னியில் அமெரிக்கப்படைகள் கைப்பற்றியதாகத் தெரியவருகிறது.

மேமீ 4-ம் தேதியன்று 2 ஜப்பானிய விமானங்கள் மில்னி விரிகுடாவைத் தாக்கின. சேதமொன்றுமில்லை. மேமீ 6-ம் தேதியன்று ஜப்பானிய நீர்மூழ்கிகள் ஆஸ்திரேலியாவுக் கருகில் 5 நேசதேசக் கப்பல்களை மூழ்கடித்தன. மேமீ 9-ம் தேதி நேசதேச விமானங்கள் டச்சு நியூ கினியாவுக்கும் நியூ பிரிட்டனுக்கும் மத்தியிலுள்ள லக்ஷியங்களைத் தாக்கின. இதற்குப் பதிலாக ஆஸ்திரேலியாவுக்கு வடக்கிலுள்ள டார்வின் துறைமுகத்துக்கருகிலுள்ள மில்லிங்கிம்பியை ஜப்பானிய விமானங்கள் தாக்கின. 2 விமானம் நஷ்டமாயிற்று. 3 விமானங்கள் பழுதுண்டன.

ஸலாமூவாவிலிருந்து மூபோவுக்குச் செல்லும் ஜப்பானிய ஸப்ளை மார்க்கத்திலுள்ள டோபாடூபி பிரதேசத்தில் கடும் போர் நடைபெறுகிறது. நியூ கினியாவிலுள்ள பாப்டூபியை நேசதேசப்படைகள் கைப்பற்றிவிட்டன.

ஜப்பானுக்குச் சமீபத்திலுள்ள ஹொக்கைடோ என்னும் தீவிலுள்ள ஹோராபெட்ஸு என்னும் கிராமத்தை மேமீ 9-ம் தேதி இரவில் ஒரு நீர்மூழ்கி வெடி குண்டுகளால் தாக்கிற்று. அதே நாளில் மாடாங்குக்குச் சமீபத்தில் ஒரு ஜப்பானியத் துருப்புக் கப்பல் மூழ்கிற்று.

சென்ற வாரத்தில் பின்கண்ட இடங்களை நேசதேச விமானங்கள் தாக்கின.

மே **2**.—முண்டா (எதிரிப் படை ஸ்தாபனங்கள்) கிஸ்கா (ஒரு நாளில் 8 தடவை).

மே **3**.—ரிகாடா விரிகுடா (எதிரிப் படை ஸ்தாபனங்கள்) சாந்தா, இஸெபல் தீவு, கிஸ்கா (9 தடவை) கோலம்பங்காரா, விலா.

மே **4**.—ஆட்டு.

மே **5**.—ட்ரபோ, ஆரு தீவுகள், டாஜாண்டோ தீவுகள், கேவிவா, (கிம்பா விரிகுடா), ஆட்டு, கிஸ்கா.

மே **6**.—வேவாக், டிம்கா, போயால்.

மே **7**.—கிஸ்கா, (6 தடவை), ஆட்டு (4 தடவைகள்) லாவெல்லா தீவு, (ஸாலமன்ஸ் தீவுகள்), முண்டா.

மே **8**.—மாட்டாங்க், பின்ஷேபன், மூபோ, டிமார், பூபோ, ஆசித்தீவு, காகிலி, பல்லாலி.

மே **10**.—கைமானு, (டச்சு நியூகினியா) மனோக்வாரி, சோராங்க், சேராம், உபிலீ, (நியூ பிரிடன்), டாலாக்கடல், காஸ்மாடா, க்ளஸ்டர் முனை, ரூக் தீவு, (விடியாஸ் ஜலசந்தி), வேவாக், மாடாங்க், ஸைதார், கோமியாடு, டோடோடூபி.

மே **11**.—பாபோ, மாபிஸ்தலம், ஆரோ தீவுகள், ஸௌம்லாகி, (டான்னிம்பர் தீவு), டாலாக்கடல், க்ளஸ்டர் முனை, பின்ஷேபன், ஸலாமூவா, லே மூபோ.

**சைனு**.—யாங்க்டீஸ் நதியின் தென் கரையிலிருந்து புதிய தாக்குதல் செய்ய ஜப்பானியர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். மேமீ 8-ம் தேதியன்று அமெரிக்க விமானங்கள் காண்டனுக்கருகிலுள்ள ஜப்பானிய விமான தளத்தைத் தாக்கின. வட ஹூனனில் டங்க்டிங்க் ஏரியின் வடக்குக் கரையில் ஒரு ஸ்தலத்தைப் பிடிக்க ஜப்பானியர்கள் செய்த பிரயத்னம் வீணாகிவிட்டது.

**பர்மா**.—அரக்கானில், பூதேடாங்கிலிருந்து நேசதேசப் படைகள் பின்வாங்கி விட்டன. மாங்க்டாவுக்காக யுத்தம் நடைபெறுகிறது.

மேமீ 6-ம் தேதியன்று 20 ஜப்பானிய விமானங்கள் காகஸ்பஸாருக்கருகிலுள்ள ராமு என்னுமிடத்திலுள்ள நேசதேச ஸ்தானங்களைத் தாக்கின. சொல்பச் சேதம் ஏற்பட்டது.

கீழ்கண்ட இடங்களை நேசதேச விமானங்கள் தாக்கின :—

மே **2**.—யுவாடங்க், மெயிமியோ, நாம்கின், மெயிங்க்வான், காண்டா, மிக்டிலு.

மே **3**.—ஸாகேயிங், மிக்டிலு.

மே **4**.—டாங்கூ.

மே **5**.—மியின்ஸா, இண்டெயிஸ்கி, மாக்வி, அக்யாப் தீவு, ஆலன்.

மே **6**.—அக்யாப் தீவு, இண்டெயிஸ்கி.

மே **7**.—மாயூ தீபகற்பம், ஐராவதியிலும், சிண்ட்வின் நதியிலும் போக்குவரவுகள், மாண்டலே.

மே **8**.—மாயோஹாங்க், மிண்டியா, காந்தா, மியன்சான், ரெங்கூன், மாண்டலே நெட்காயாங்க், மாஸ்காஸ்க், காமாங்க், நாதிஸாஸிக்.

மே **9**.—மாயூ நதியில் போக்குவரவுகள், புரோமுக்கருகில் நீராவிக் கப்பல்கள், பாஸ்க்ஸீக் பாலம், கால்மியோ சாமான் இறக்கும் ஸ்தலம்.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**2—5—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—(20 எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன).

தொழிற்சாலை நிலயங்கள்.—இர்மூயிடென் (Irmuiden)—(6 எதிரி விமானங்களும், 4 நேசதேச விமானங்களும் காணப்படவில்லை).

இரவு —சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில், ருஷ்யாவிலுள்ள கோமெல் (Comel), மின்ஸ்க் (Minsk), ஆர்ஷா (Orsha), பிரையான்ஸ்க் (Bryansk).

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரிப் போக்குவரத்துகள் சைனியங்கள்.—டூனிஸியாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

அச்சு டாங்கிகள்.—மாஸ்ஸிகால்ட் (Massicault) பிரதேசம்.

அச்சுக் கப்பல்கள்.—டூனிஸ் குடா.

விமான நிலயங்கள்.—டூனிஸ் (Tunis) பிரதேசம்.

கப்பற்கட்டும் துறைகள்.— பிஸர்ட்டா (Bizerta).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda), அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானிய தளம் —நியூகினியாவிலுள்ள வீவாக் (Wewak).

எதிரி லக்ஷியங்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங்கிற்கு (Buthidaung) தெற்கிலே.

எண்ணெய்க் கிடங்குள்ள நகரம்.—பர்மாவிலுள்ள சிண்ட்வின் (Chindwin).

பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

**3—5—43.** (திங்கட்கிழமை).

### ஐரோப்பா (Europe).

ருஷ்யாவிலுள்ள கோமெல்(Comel), மின்ஸ்க் (Minsk), ஆர்ஷா (Orsha), பிரயான்ஸக் (Bryansk).

பகல்.-ரயில்வே தொழிற்சாலைகள்-லொரெய்னில் (Lorraine) உள்ள தையான்வில்லி (Thionville).

### டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள், டாங்கிகள்.—டூனிஸில் (Tunis) யுத்தம் நடக்கும் பிரதேசங்கள், பிஸெர்ட்டா (Bizerta).

கப்பற்கட்டும் துறைகள்.—பிஸெர்ட்டா (Bizerta).

எதிரி விமான நிலயங்கள்.—டூனிஸியா (Tunisia).

சாமான்கள் இறக்குமிடங்கள்.— டூனிஸியா கரைகளில்.

விமான நிலயம்.-லேம்பெடுஸா(Lampedusa) தீவு.

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும.

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—ரெகாடா கடல் (Rekata Bay), சாந்தா இஸபல் தீவு (Santa Isabel Island).

ஜப்பானியச் சைனியங்கள்-அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska) ; பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

எதிரி ரோடு ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள வாடாங் (Ywataung).

படகுகள் கட்டும் துறைகள்.—பர்மாவிலுள்ள செகெய்ங் (Sagaing) ; பாலங்கள் மித்கிஞ (Myitkyina), பின்பா (Pinbaw).

**4—5—43.** (செவ்வாய்க்கிழமை).

### ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலை லக்ஷியங்கள்—பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வெர்ப் (Antwerp).

மின்சார நிலயம்.—ஹாக் (Hague).

கப்பல்கள்.—நார்வே (Norway)—(3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலை லக்ஷியங்கள்—ரூரிலுள்ள டார்ட்மெண்டு (Dortmund).

### டூனிஸியா (Tunisia). மத்தியதரைக்கடல் (Mediterranean).

வேவு பார்த்தல்.—டூனிஸியாவில் முன்னேறித்தாக்கும் பிரதேசங்கள்.

எதிரிப் போக்குவரத்துகள், பீரங்கி ஸ்தானங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பற்கட்டும் துறைகள்.—பிஸெர்ட்டா (Bizerta).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானதளம்.—டச்சு நியூ கினியாவிலுள்ள டாபோ (Dabo); ஆரு தீவு (Aru Islands)-(6 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ஜப்பானியப்படகுகள்.-டஜான்டே (Tajandoe) தீவுகள், லோலோபா (Lolobau) தீவுகள்.

ஜப்பானிய கிராமம்.—கேவிவா (Gaueiva).

வேவு பார்த்தல்.—பர்மாவிலுள்ள மின்ஷா (Myinza)விற்கு அருகில்.

பர்மாவிலுள்ள இண்டேய்ன்கி (Indainggyi).

விமானமிறங்குமிடங்கள்.-ரங்கூன் (Rangoon).

சைனாவிற்கு அருகிலுள்ள ஹேய்னன் (Hainan) தீவு.

கப்பற்கட்டும் பிரதேசங்கள்.— ஹெய்போங் (Haiphong).

**5—5—43.** (புதன்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—யுத்த தளவாடங்கள்—ஸின் (Seine) முகத்துவாரத்தில்.

துறைமுகங்கள்.-இதாலியிலுள்ள ரெஜியோடி களாபிரியா (Regi Odi Calabria), டாரண்டோ (Taranto).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—நீப்ரோ பெட்ரோவ்ஸ்க் (Dnepropetrovsk), கிரிமெண்சு (Kremenchug), பிரியான்ஸ்க் (Bryansk).

**டூனிஸியா (Tunisia),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

கப்பல்கள்—டூனிஸியன் ஜலசந்தி.

துறைமுகங்கள்—டூனிஸ் (Tunis) லெகோலெட் (Legoulette).

தங்கியுள்ள எதிரித் துருப்புகள்—டூனிஸிற்கு (Tunis) அருகில்.

கப்பல்கள்—டூனிஸ் (Tunis) குடா.

துறைமுகங்கள்—ஸிஸிலியிலுள்ள ட்ரபானி (Trapani), மார்ஸலா (Marsala).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியக் கப்பல்களும், விமானதளங்களும்-நீயூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak), டச்சு நீயூ கினியாவிலுள்ள டிமிகா (Timika).

சைனியம் தங்குமிடங்கள்—கெய் தீவிலுள்ள டோயல் (Toeal).

கட்டடங்கள் தரை ஸ்தாபனங்கள்—பர்மாவிலுள்ள டவுன்கூ (Toungoo) இருப்புப் பாதை, மிங்யான் (Myingyan) விலா (Vila), ரேகடா கடல் (Rekata Bay), சாந்தா இஸ்பேல் தீவுகள் (Santa Isabel Islands).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

**6—5—43.** (வியாழக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகலிலும் இரவிலும் நடந்த ஆர். ஏ. எப். விமான நடவடிக்கைகளைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**டூனிஸியா (Tunisia).**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

அச்சு போக்குவரத்துக்கள், டாங்கிகள்—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.

விமான நிலயங்கள்.—டூனிஸ் (Tunis), பிஸர்ட்டா (Bizerta).

டூனிஸ் (Tunis), பிஸேர்ட்டா (Bizerta).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியங்கள்.—கிஸ்கா (Kiska), ஸாலமன்ஸிலுள்ள முண்டா (Munda).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.-ரேகடா (Rekata) கடல், சாந்தா இஸாபெல் தீவுகள் (Santa-Isabel Islands).

ஜப்பானியச் சைனியங்கள்.—மாயூ தீபகற்பம் (Mayu); பர்மாவிலுள்ள மாக்வி (Magwe), அக்யாப் தீவு (Akyab Island).

**7—5—43** (வெள்ளிக்கிழமை).

**ஐரோப்பா (Europe).**

பகல்.—பாதுகாக்கப்பட்ட கப்பல்—பிரிடனி (Brittany) மூழ்கிற்று.

விமானத் தாக்குதல்கள்.—வடக்கு பிரான்ஸ்; இங்கிலீஷ் கால்வாய்.

**டூனிஸியா (Tunisia),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

அச்சு சைனியங்கள்.—டூனிஸ் (Tunis), பிஸெர்ட்டா (Bizerta).

இந்நகரங்களிலும், இவைகளைச் சுற்றிலும்.

அச்சு நாட்டு மிகுதிகள்.—டூனிஸ் (Tunis), பிஸெர்ட்டா (Bizerta)வினின்றும் திரும்பி ஓடுவன.

எதிரிக் கப்பல்கள்.—டூனிஸ் குடா (Tunis Gulf).

இலக்குகள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), ஆரு தீவு (Aru Island).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madaung), பின்ஷேபென் (Finschhafen), மூபோ (Mubo) பிரதேசம்.

டிமோரிலுள்ள கோபேங் (Koepang), டச்சு நியூ கினியாவிலுள்ள பாபோ(Babo).

ஆ நதிபாலம்.—மாண்டலே (Mandalay).

ரயில் ரோட்.—டவுன்கோ (Toungoo).

ஜப்பானியச் சைனியங்கள்.-காங்பூ (Hkang Pu).

ஸப்ளைக் கிடங்குகள்.—மாபூ தீபகற்பம்.

கிட்டங்குகள்.—ஐராவதி, சிண்ட்வின் நதிக் கரைகள்.

விமான மிறங்குமிடங்கள்.—மாண்டலே (Mandalay).

8—5—43 (சனிக்கிழமை).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ரயில்வே சென்டர்கள் ரயில்வேக்கள்.—பிரயான்ஸ்க் (Bryansk), போல்ட்வா (Poltava), பைல்கோராட் (Byelgorod).

டூனிஸியா (Tunisia), மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி டாங்கிகள், துருப்புகள் வண்டிகள்.—கேப் பான் தீபகற்பம். (Cape Bon Peninsula).

விமான மிறங்குமிடங்கள்.—கேப்பான் (Cape Bon) தீபகற்பம்.

கப்பற் கட்டும் பிரதேசங்கள்.—பாலெர்மோ (Palermo).

எதிரி கப்பல்கள்.—ஸிஸிலியன் ஜலசந்தி.

விமான நிலயம்.—ஸார்டீனியாவிலுள்ள பெண்டெவரியா (Pantellaria).

ஸார்டீனியாவிலுள்ள போர்ட் எம்பெடோசில் (Porto Empedocle).

(1—5—43உ முதல் 8—5—43உ முடிய

ருஷ்யா (Russia).

ருஷ்ய நஷ்டம் 235 விமானங்கள்—எதிரி நஷ்டம் 930 விமானங்கள்).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—பெரோ தீவிலுள்ள காஹிலி (Kahili), ஷார்ட்லண்ட்ஸிலுள்ள கலாலி (Kallale).

ஜப்பான் நாசகாரிகள்.—ஒஸி தீவு (Ozi-Island), நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ரயில் ரோட் தளங்கள்.-ரங்கூன் (Rangoon).

ரயில் ரோட் பாலம்.—பர்மாவிலுள்ள ஸிந்தி (Sinthe).

ரயில்வே ஸ்தலங்கள்.-மாண்டலே (Mandalay), ரயில் ரோட் பாலம் மான்காங் (Mongaung) கிற்கு தெற்கே, ரயில் ரோட் ஸ்தாபனங்கள்—முன்வாவிற்கு 5 மைல் வடக்கேயுள்ள அலான் (Alon).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

3—5—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

டூனிஸியா (Tunisia).

டூனிஸியன் கடற்கரை (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).

கிராஸ்னோடார் (Krasnodar) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள போர்ட் டார்வின் (Port Darwin).

4—5—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

இரவு.—ஒரு நகரம்—இங்கிலாந்தில் கிழக்கு ஆங்கிலியாவில் (East Anglia).

டூனிஸியா (Tunisia),

விமானச் சண்டைகள்.—டூனிஸியன் கரை.

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.-குபான் (Kuban) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

5—5—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமான நடவடிக்கை எங்கும் இல்லை.

டூனிஸியா (Tunisia).

விமானச் சண்டைகள்.—டூனிஸியாவின் துறைகளில்.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்துக்கள்.—ருஷ்ய அரணுக்குப் பின்னால்.

6—5—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**டூனிஸியா (Tunisia).**

**விமானச் சண்டைகள்.**—டூனிஸியன் கடற்கரைகளில்.

**தூரக்கிழக்கு (Far East).**

**விமானச் சண்டைகள்.**—பூதிடாங் (Buthidaung) (2 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

**7—5—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

கடற்கரை நகரம்.—கிழக்கு ஆங்கிலியா (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

**டூனிஸியா (Tunisia).**

**விமானச் சண்டைகள்.**—டூனிஸியன் கடற்கரை.

**நகரங்கள்.**—டூனிஸ் (Tunis), பிஸெர்ட்டா (Bizerta).

**ருஷ்யா (Russia).**

லெனின்கிராட் (Leningrad) பிரதேசம்.

**8—5—43.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

லண்டன் பிரதேசம்—சில இடங்கள் இங்கிலாந்தின் தெற்கு கரை.

**ருஷ்யா (Russia).**

**விமானச் சண்டைகள்.**—நோவோரோஸிஸ்க் (Novorossisk).

**தூரக்கிழக்கு (Far East).**

**விமானச் சண்டைகள்.**—பூதிடாங் பிரதேசம்.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஆபிரிக்காவில் வெற்றிகள்.** வட ஆபிரிக்காவில் நேசநாடுகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளைக் கேட்டு நாம் சந்தோஷமடைகிறோம். ஈஸ்வரனுக்கு நம்முடைய வந்தனோபசாரத்தையும் செலுத்துகிறோம். மேமீ 7-ம் தேதியன்று வெள்ளிக்கிழமை பிற்பகலில் அரைமணிக்குள்ளாக ஒன்றன்பின் ஒன்றாக டூனிஸியாவின் தலைநகரமான டூனிஸும், பெரிய தளமான பிஸர்ட்டாவும் விழுந்தன. அவைகளுடன் பெர்ரி வில்லா என்ற விமான தளமும், ஸிபோர்டோ என்ற இடமும், பாண்போஸ், ஸார்டைர், ஹாம் மாம்லிப், எயின் எல் ஆஸ்கர், கிரெடிவில்லி, பிர்மிச் செர்கா, ஸாகுவான், கார்தேஜ், லா கௌலட்டு, பெயியன்னி, மோகார்ன் முதலிய இடங்களும் பிடிபட்டன.

அச்சுநாடுகளின் வீழ்ச்சி திடீரென்று சம்பவித்தது. மேமீ 6-ந் தேதியன்று பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் பேசியபொழுது, வெற்றியில் பூர்ண நம்பிக்கையிருந்தபொழுதும், வெற்றி கிடைக்கும் தினம் சமீபத்திலில்லை என்று வெளியிட்டார்கள். அமெரிக்காவின் யுத்த காரியதரிசியான மிஸ்டர் ஸ்டிம்ஸன் "அச்சப்படைகள் காலி செய்து விட்டதென்பதற்கு ஹேஷ்யங்கள் ஒன்றுமில்லை" என்று அபிப்பிராயப்பட்டார். அமெரிக்காவின் யுத்த அறிக்கைத் தலைவரான மிஸ்டர் எல்மெர்டேவிஸ் என்பவர், எதிரி கடைசி முடிவாக பிஸெர்ட்டாவில் ஊன்றி நிற்பான்" என்று சொன்னார். இந்த மாதத்தின் முடிவுக்குள் எதிரிகள் நிலை குலைந்து விடுவார்களென்று ஜெனரல் கிராட் அபிப்பிராயப்பட்டார்.

வி வி வி வி வி

**டூனிஸின் வீழ்ச்சி.** எல்லா ஜோஸ்யங்களும் பொய்யாகிவிட்டன. வியாழக்கிழமையன்று ஜெனரல் ஆண்டர்ஸன் 400 டாங்குகளுடனும் 2,000 விமானங்களுடனும் மெட்ஜஸ் எல் பாப்புக்கருகிலுள்ள மாஸிகால்டு என்னுமிடத்திலிருந்து முன்னேற ஆரம்பித்தார். ராய்ட்டர் சொல்லுகிற பிரகாரம் தாக்குதல் ஆரம்பித்து 36 மணி நேரங்களுக்குள்ளாகவே பிரிடிஷ் பீரங்கிப் படைகளும் டாங்கிகளும் வெடிகுண்டுகளால் சேதமுற்ற டூனிஸின் தெருக்கள் வழியாகச் சென்றுவிட்டன. ரஸ்தாக்கள் பூராவிலும் சிதறியவும் கைவிட்டுப் போனதுமான யுத்த தளவாடங்கள் ஏராளமாகக் கிடந்தன. பிரிடிஷ் பீரங்கி பலத்தையும், தளகர்த்தர்களின் சாதுர்யத்தையும் தாங்கமுடியாமலும், ஜெர்மன் துருப்புகளின் மனோதைரியம் குலைந்துவிட்டபடியாலும் பிரிடிஷ் படைகளின் முன்னேற்ற வேகத்தை எதிரிகள் தடுக்க முடியவில்லை. ஸெயிண்டு ஸைபிரியன் என்னும் ஜெர்மன் ஸ்தானத்தைப் பிளந்துகொண்டு பிரிடிஷ் துருப்புகள் நகரத்துக்குள் புகுந்தன. தூசி படிந்த தேகத்துடன் டாங்கிப் படைகள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறின. பிரிடிஷ் படைகளின் ஆயுதபலம், பீரங்கி பலம், மனித பலம், இவைகளின் வலிமையை எதிரிகள் தாங்க முடியவில்லை. நமது படைகள் தெருத் தெருவாகவும், வீடு வீடாகவும், ஆளுக்கு ஆளுமாகவும் சண்டை செய்து நகரத்தில் முன்னேறின. வான் ஆர்னிமுடைய பாரந்தின் படையும், ஹெர்மான் கோயரிங்கின் கிரனேடியர் படையும் நன்றாய், தோல்வியுற்று நிலைகுலைந்தன.

**பிஸர்ட்டாவின் வீழ்ச்சி.** இவ்விதமாக ஒரு மின்னல் எதிர்ப்பு மூலம் டூனிஸ் நகரம் பிடிபட்டது. பிஸர்ட்டா பிடிபட்டதும் இதே விதமாகத்தான். அமெரிக்கர் இதில் புகழ் பெற்றார்கள். அமெரிக்க பீரங்கிகள் நிமிஷத்திற்கு 40 குண்டுகள் வீதம் பொழிந்து மலைகளிலுள்ள எதிரியின் ஸ்தானங்களைப் பொடி செய்து விட்டன. ராய்ட்டரின் அபிப்பிராயப்படி அங்கே இடி முழக்கம் ஏற்பட்டது. மலைகள் பிளந்தன. பள்ளத்தாக்குகளில் தீ வெளிச்சமும், கரும்புகையும் கிளம்பின.

வி வி வி வி வி

**கீர்த்தியாருடையது.** "பிஸர்ட்டாவில், அமெரிக்கர்களுக்கும், டூனிஸில் பிரிடிஷாருக்கும்" கீர்த்தியென்று அமெரிக்கன் என்ற பத்திரிகை பங்கிடு செய்துவிட்டது. ஆகிலும் வெற்றியில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பாகமுண்டு. கிராட் சொல்லுகிறபடி, ஆயுதமில்லாமலும், ஆடைகளில்லாமலும், ஜோடுகளில்லாமலும், ஆனாலும் வெற்றியில் பூர்ண நம்பிக்கையுடனும் பிரெஞ்சுத் துருப்புகள் பிரிடிஷ் அமெரிக்கப் படைகளுடன் கலந்து நின்று சண்டை செய்திருக்கின்றன. பிரெஞ்சுக்காரர்களுக்கு விசேஷ சந்தோஷமுண்டாகியிருக்கிறது. வெற்றியானது மேமீ 8-ம் தேதி ஏற்பட்டதில் ஒரு விசேஷமிருக்கிறது. இந்த தினம் ஜோன் ஆப் ஆர்க் என்னும் மாதை ஞாபக மூட்டும் தினம். அம்மாது ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் பிரான்ஸின் வெற்றிக்கும் ஸ்வதந்திரத்துக்கும் அடிப்படையாகயிருந்தவள். ஸ்வதந்திர பிரெஞ்சுப்படைகள் ஜோன் ஆப் ஆர்க்கின் கொடியையே உபயோகித்துவருகிறார்களென்பது கவனார்கமுள்ளது அதாவது லொரைனின் செஞ்சிலுவை அடையாளம். லொரையின் உள்பட பிரான்ஸ் தேசத்தின் ஸ்வதந்திரத்தை அடைவதில் அவர்களுக்கிருக்கும் தீர்மானத்தை வெளிக்காட்டுகிறது.

வி வி வி வி வி

**பிரிடிஷ் 1-வது படை.** சந்தோஷமான வெற்றி சமயத்தில் தீரமாக யுத்தம் செய்த பிரிடிஷ் 1-ம் படைக்கு நம்முடைய புகழுரை உரித்ததாகும். சமீப காலம் வரையில் ஜெனரல் ஆண்டர்ஸனின் துருப்புகளுக்கு அநேக ஏமாற்றங்கள் ஏற்பட்டன. நவம்பர் மாதத்தில் ஜெர்மானியர்கள் முன்யோசனையுடன் டூனிஸியாவில் பலமாக ஊன்றிக்கொண்டார்கள். பிறகு மெட்ஜஸ் எல் பாப்புக்கு பிரிடிஷ் 1-ம் படை துரத்தியடிக்கப்பட்டது.

வி வி வி வி வி

**பிரிடிஷ் 8-ம் படை.** டூனிஸைப் பிடித்ததில், எல் அலாமீனிலிருந்து என்பிடாவில்லிக்கு, மலைகள் பேரிலும் பாலைவனங்களிலும் 1,400 மைல்கள் கடந்து வந்து ஆறு மாதங்களாகக் கடும் யுத்தம் செய்து வந்த மாண்ட் காமரியின் எட்டாம் படையும் புகழ் பெற்றுவிட்டது. மாண்ட் காமரியின் 11-வது ஹஸ்ஸார்ஸ் படையானது என்பிடாவில்லியிலிருந்து மெட்ஜஸுக்கு திடீரென்று அனுப்பப்பட்டது. பிரிடிஷ் முதல் படையும், எட்டாம் படையும் எகிப்திலிருந்து வெகுதூரம் வந்திருக்கும் டாங்கிப் படைகளும் ஒன்று சேர்ந்து நகரத்தை துளைக்க ஆரம்பித்தன.

வி வி வி வி வி

**சரண் புகுவதா இல்லையா?** எதிரிகளைத் துரத்தியடிப்பது நின்று விடவில்லை. சிதைபட்டு துரத்தியடிக்கப்பட்ட எதிரி கேப் பான் தீபகற்பத்திற்குப் பின் வாங்குகிறான். இங்கே சற்று இளைப்பாருவோமென்று வீணாக நினைத்திருக்கிறான். 64,000 துருப்புகள் கைது செய்யப்பட்டுவிட்டன. 12,00,000 துருப்புகள் சுற்றி வளைக்கப்பட்டுவிட்டன. பின் வாங்கிவரும் துருப்புகளை நேசதேசப் படைகள் நாசம் செய்து வருகின்றன. ஜெர்மானியர்கள் எங்கே நிலைத்து நிற்பார்கள். ஓடாமல் நிற்பார்களாவென்பதே சந்தேகம். ஓடாவிட்டால் அவர்கள் கதி என்ன. ஆல்ஜியர்ஸிலுள்ள ஒலிபரப்பில் பின் வருமாறு சொல்லப்பட்டது. "அச்சு நாடுகள் கடலுக்குத் துரத்தப்படுகிறார்கள். அவர்கள் சரண் புகுரவேண்டும். அல்லது சமுத்திரத்தில் மூழ்கவேண்டும். அவர்கள் கப்பல்களில் சென்றால் அவர்களுக்கு நாசம் வந்துவிடும். பிரிடிஷ் கடற்படை ஸிஸிலிக்குப் போகும் மார்க்கத்தை வழிமறிக்கிறது. ஆபிரிக்காவில் பிரிடிஷ் விமானப்படை ரோந்து செய்கிறது."

[இது எழுதியபின் கேப் பான் துறைமுகமும் பிடிபட்டுவிட்டது. ஜெர்மன் சேனாதிபதியான ஆர்னிமும் இதாலிய சேனாதிபதியான மெஸ்ஸியும் உள்பட ஏராளமான துருப்புகள் கைதிசெய்யப்பட்டன. ஆபிரிக்கா யுத்தம் முடிவடைந்துவிட்டது.—பத்திராதிபர்.]

**நேசதேச விமானத் தாக்குதல்.** இது மிகவும் பயங்கரமானது. 7-ம் தேதியன்று மட்டும் 2,500 விமானங்கள் பறந்திருக்கின்றன. 17,000 கஜங்கள் பறப்புள்ள 4 மைல்கள் பிராந்தியத்தில் விமானங்கள் சென்றிருக்கின்றன. அன்றயதினம் கடலில் 12 அச்சுநாட்டுக் கப்பல்கள் மூழ்கிவிட்டன. 15 நாசமடைந்துவிட்டன. ஒரு நாசகாரியும், 7 படகுகளும், 4 கலங்களும் நஷ்டத்தில் சேர்ந்தவை.

வி வி வி வி வி

**ஆபிரிக்க நோய்.** இந்த தோல்வி ஏற்படுமென்று முஸோலினிக்குத் தெரிந்திருக்கவேண்டும். சென்ற வாரத்தில் பலாஸோ வெனிஸியா கட்டடத்திற்கு வெளியே கூடிய கூட்டத்தில் பேசியபொழுது முஸோலினி, உண்டுபண்ணப்பட்ட ஆறு வருஷங்களுக்குள்ளாகவே இதாலிய சாம்ராஜ்யம் வீழ்ந்துவிட்டதென்று வெளியிட்டான். ஆபிரிக்காவைத் திரும்பப் பிடிக்கவேண்டுமென்ற எண்ணமானது ஒரு ஆபிரிக்க நோயென்றும் முஸ்ஸோலினி ஒப்புக்கொண்டான். அடுத்த நிமிஷத்தில் மார்ட்டிக்கொண்டு நஷ்டமானது தாத்காலிகமானதென்றும் தோல்வியானது ஓய்வு நேரமென்றும் வெளியிட்டான். அவனுடைய சொற்பொழிவிலிருந்து, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவனுக்கு ஏற்படப்போகும் எதிரிகளிடமிருந்து அவனுக்கு ஏற்பட்டிருக்கும் கிலியை அது சூசிப்பிக்கிறது. "துரோகிகளுக்கு மரணம்" என்றும் அவன் கூச்சலிட்டான். சரித்திர ஆரம்பம் முதல் இது தான் கொடுங்கோல் மன்னர்களின் ஆட்சி முறை.

வி. வி வி வி வி

**ஹிட்லரின் தற்காப்பு ஏற்பாடுகள்.** ரோட்ஸ் தீவுகளை ஆக்கிரமித்ததின் மூலமாக கிழக்கு மத்தியதரைப்பிரதேசத்தைத் தற்காப்பு செய்வதற்கான முறைகளைக் கையாண்டு வருகிறான். ரோட்ஸ் தீவு 60 மைல் நீளமும் 50 மைல் அகலமும் உள்ளது. இதாலியர் ஆட்சிக்குட்பட்டது. டோடிகானீஸ் தீவுகளில் இது பெரிய தீவு. இதில் கலாஸஸ் என்பவருடைய சிலையிருக்கிறது. இது முக்கியமான கடற் விமான தளம். இதிலிருந்து துருக்கி பத்து மைலிலிருக்கிறது.

வீ வி வி வி வி

**ஹிட்லரின் கெயிரோ.** ஏட்டிரியாடிக் கடலின் உச்சி மூலையில் மறை முகமாகயிருக்கும் இஸ்ட்ரியன் தீபகற்பத்தில் ஹிட்லரின் மத்தியதரைக்கடலின் தற்காப்பு தலைமைக் காரியாலயமிருக்கிறதென்று தெரியவருகிறது. தீபகற்பமானது முக்கோணவடிவமுள்ளது. டிரிஸ்டி, பூமே, போலா என்றும் ஸ்தலங்கள் மூன்று மூலைகளிலிருக்கின்றன. அவைகளில் போலா என்பது யூ படகு தளம். இது மத்தியிலிருக்கிறது. மால்டாவிலிருந்து 650 மைல்கள் தூரத்திலும், அலெக்ஸாண்டிரியாவிலிருந்து 1,200 மைல்கள் தூரத்திலும், ஜிப்ரால்டரிலிருந்து 1,650 மைல்கள் தூரத்திலுமிருக்கிறது. இங்கே நேசநாட்டு நீர்மூழ்கிகள், சுலபமாகச் செல்லமுடியாது. விமானத்திலிருந்து தாக்குவது சுலபம். லண்டனிலிருந்து பெர்லினிருப்பது போல, வெனிஸிலிருந்து போலாயிருக்கிறது. கப்பல்கள் மூலமாக போலாவைத் தாக்குவதென்பது நடைபெற முடியாது. ஏனென்றால் கப்பல்கள் நீண்ட குறுகலாக மார்க்கமுள்ள ஏட்டிரியாடிக் கடல் வழியாகச் செல்லவேண்டும். இருபக்கத்திலும் அச்சு விமான தளங்களிலிருக்கின்றன.

வி வி வி வி வி

**ஹிட்லர் பாவலிச்சு சம்பாஷணை.** குரோட்டின் பொம்மைத் தலைவரான பாவலிச்சுடன் ஹிட்லர் சம்பாஷணை செய்தானும். இதற்கு முகாந்திரமிருக்கிறது. இஸ்ட்ரியா என்பது குரோஷியாவுக்கு சமீபத்திலிருக்கிறது. சமீபகாலத்தில் குரோட் கொரில்லாப்படைகள் தொந்தரவு செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

வி வி வி வி வி

**குரோட் கொரில்லாப்படைகள்.** ஜெர்மனி யூகோஸ்லாவியாவைப் பிடித்தபொழுது இதாலியானது டால்மேஷியா, ஸ்லாயூனியா என்ற இடங்களின் பெரும் பாகத்தை ஆக்கிரமித்துவிட்டது. இதை குரோட்டுகள் மறந்துவிடவில்லை. ஆகையால்தான் இன்று கொரில்லாப்படைகள் ஆல்பெலினியாவிலிருந்து இஸ்ட்ரியா வரையில் உள்ள பிரதேசத்தில் நடமாடுகின்றன. ஸ்வாவென்ஸ்கி, நாஷனல்னி ஆஸ்லோ பாடிலாக்கி பாக்ரெட் என்னும் கொரில்லாப்படையானது லப்வனனிலிருந்து டிரிஸ்டிக்கும், பூமேக்கும் போக்கும் இருப்புப்பாதைகளை ஆக்கிரமித்துவிட்டது. இவ்விடத்தில் தான் மத்தியதரைக் கடலின் கிழக்குப் பிராந்திய தற்காப்புக்குவேண்டிய தொழிற்சாலைகளும் சாமான் கிட்டங்கிகளுமிருக்கின்றன. தன்னுடைய புதிய தளங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து கொரில்லாப்படைகள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று ஹிட்லர் வேண்டுகிறான்.

**பல்கேரியாவுக்கு முற்றுகை.** கருங்கடலோரமாகயிருக்கும் பல்கேரியக் கடற்கரைப் பிரதேசத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. ருஷ்யக் குடைத் துருப்புகள் தாக்கிவிடுவார்களோ என்ற பயமுண்டாகியிருக்கிறது. புதன்கிழமை முதல் பல்கேரிய—துருக்கி எல்லைப் புறத்தில் நடமாட்டம் தடைபட்டது. கடற்கரைப் பிரதேசத்தை ஜெர்மானியர்கள் காலிசெய்துவிட்டார்கள். பல்கேரியாவைச் சுற்றிலும் முற்றுகை ஏற்பாடாகிவிட்டது.

வி வி வி வி வி

**அயல் நாடு செல்வதும் கைதி செய்வதும்.** பிரான்ஸில் 18 முதல் 40 வயது வரையிலுள்ள எல்லா ஆண்களையும் ஜெர்மனிக்கு அனுப்பவேண்டுமென்று ஹிட்லர் வேண்டிக்கொண்டிருக்கிறன். பிரான்ஸிலிருந்த குடியரசைச் சேர்ந்த எல்லா ஸ்பெயின் தேசத்தார்களும் முந்திய ஸ்பானிஷ் குடியரசு அரசாங்கத்தின் அங்கத்தினர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

வி வி வி வி வி

**துராகிருதமாய்க் கொண்டு போவது.** ஹாலந்தின் நிர்வாகியான டாக்டர் ஸெயிஸ் இன்கார்டின் மகளை டச்சுக்காரர்கள் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அவளைப் பிணையாளியாகவும் வைத்திருக்கிருர்கள்.

வி வி வி வி வி

**வேலை நிறுத்தம்.** ஸோபியாவில் 5,00,000 ஜனங்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். 7,000 பேர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள்.

வி வி வி வி வி

**நாசவேலை.** ஆஸ்லோ துறைமுகத்தில் நாசவேலைக்காரர்கள் நான்கு கப்பல்களைச் சின்னபின்னம் ஆக்கிவிட்டார்கள். ஜெர்மனியில் வேலை செய்வதற்காக தொழிலாளர்களைப் பதிவு செய்யும் ஆபீஸுக்குத் தீவைத்துவிட்டார்கள்.

டூரினிலுள்ள பியாட், தொழிற்சாலைக்கும், மிலானுக்கும், ஜெனேவாவுக்கும் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

**புதிய கைதி முகாம்கள்.** ஜெர்மனியிலேயே ராஜீய முறையில் சந்தேகப்படக்கூடியவர்களை அடைத்துவைப்பதற்காக புதிய கைதிமுகாம்கள் ஏற்பாடாகியிருக்கின்றன.

வி வி வி வி வி

**பொய் பிரசாரம்.** இம்மாதிரி அதிருப்திகரமான நிகழ்ச்சிகளை மறைப்பதற்காக கோயபல்ஸ் புதிய கட்டுக்கதைகளை ஜோடித்து வருகிருன். யூ படகுகளின் வெற்றிகளைப்பற்றி சிலாகித்துப்பேசுகிருன். சமீபகாலத்தில் மூழ்கடிக்கப்படும் கப்பல்களின் சங்கியை குறைவுபட்டுவிட்டதென்றும் அவன் ஒப்புக்கொள்ளுகிருன். இம்மாதிரியாகவே அமெரிக்க விமானம் தாங்கிச் செல்லும் ரேஞ்சர் என்னும் கப்பல் மூழ்கிவிட்டதென்றும் பொய் சொல்லுகிருன். மார்ச்சு 26-ம் தேதியில் ஜேம்ஷட்பூரை ஜப்பானியர்கள் தாக்கினர்கள் என்று சொன்னது போல் ஏப்ரல் 26-ம் தேதியன்று கல்கத்தாவை ஜப்பானிய விமானங்கள் தாக்கினவாம்.

சமீபகாலத்தில் அடிபட்டவன் நிரபராதி என்று சொல்லுவது போல நாஸிகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆங்கிலேயப்பணக்காரர்கள் கக்ஷிக்காரர்கள் ஜெர்மனியை யுத்தத்தில் அக்ரமமாக இழுத்துவிட்டார்களாம். ஏப்ரல் 19-ம் தேதி கோயபல்ஸ் பின்வருமாறு பேசினன்: இந்த உலகநாடகமான யுத்தத்தைத் தடுக்கவேண்டுமென்று ஹிட்லர் அநேகம் தடவை பிரயத்னம் செய்தான். ஜெர்மனியின் ராணுவபலம் மேல்மேலும் குறைவுபடும் பொழுது இம்மாதிரியான அநேக சொற்பொழிவுகளை நாம் கேட்கக்கூடும். ஆகிலும் நமக்கு ஞாபகம் வரலாம். 1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ம் தேதியன்று யுத்தமானது தேசமக்கள் ஒன்று பட்டு நடத்தும் நடவடிக்கை என்று கோயபல்ஸ் சொன்னன். 1940 வருஷம் மார்ச்சு மாதத்தில் டாக்டர் லே பிரசங்கம் செய்ததாவது. "யுத்தமென்பது ஈஸ்வரனுடைய கோபமில்லை. ஈஸ்வர அருள்." இதற்குமுன் மெயின் காம்பு என்னும் புஸ்தகத்தில் ஹிட்லர் எழுதியிருக்கிருன். "சமாதானமென்பது உலகத்தை ஆளக்கூடிய சக்திவாய்ந்த ஜனங்களின் வலிமையினல்தான் நிலைநாட்டமுடியும்".

சமீபகாலத்தில் கோயபல்ஸின் பொய்பிரசாரத்தின் இரண்டு புதிய தந்திரங்கள் புலப்படு கின்றன. ஒன்று யூக்ரேனின் அபிவிருத்தியும் மற்றென்று பஸிபிக் சமுத்திரத்தைப்பற்றிய கட்டுக்கதையும்.

வி வி வி வி வி

**யூக்ரேன் புளுகு.** சென்ற வருஷத்தில் கோடைகாலத்தில் ஜெர்மனி யுத்தம் ஆரம்பித்தபொழுது யூக்ரேன் பூராவும் ஜெர்மன் வசம் வந்துவிட்டபடியால், பொருளாதார முறையில் யுத்தம் முடிவடைந்து விட்டதென்று கோயபல்ஸ் சொன்னான். ஆகிலும் நடப்பு வேறு விதமாகயிருக்கிறது. ருஷ்யர்கள் தகன வேலை செய்ததின் மூலம் நீயரோஸ்டெராய் அணை அழிந்துவிட்டது. யூக்ரேன் பிரதேசத் திலிருந்து யந்திரங்களும் ஆபரேடர்களும் அப்புறப்படுத்தப்பட்டன. ஆகையால் அதிக உற்பத்திகள் ஏற்படவில்லை. முதலில் குறைவு உற்பத்திக்கு மூடுபனிகாரணமென்றும், கடைசியாக தனிப்பட்ட முறையில் வேலைசெய்ய முடியாதபடி யூக்ரேனிலுள்ள குடியானவன் சீர்கெடும்படியாகச் செய்துவிட்ட போல்ஷிவிஸ்டு முறையும் காரணமென்றும் சொல்லப் பட்டது. ஆகையால் யூக்ரேனிலிருந்து கொள்ளையடித்துவிடுவதென்று நினைப்பது கனவுதான். நாஸிகள் செய்துவரும் பிதற்றலான பிரசாரங்களைப்பார்த்தாலே, பொருளாதார முறையில் அவக்கேடு ஏற்பட்டுவிட்டதென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

வி வி வி வி வி

**பஸிபிக் கட்டுக்கதை.** ஆபிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நேசநாடுகளுக்கு ஏற் பட்டிருக்கும் வெற்றிகளை மறைத்துச் சொல்லுவதற் காக பஸிபிக்கில் உள்ள ஜப்பானியக் கடற்படை, விமானப்படையின் பலத்தைப்பற்றியும் ஜப்பானுக்கு பஸிபிக்கில் ஏற்பட்டிருக்கும் வெற்றிகளைப்பற்றியும் சிலாகித்துப்பேச கோயபல்ஸ் ஆரம்பித்திருக்கிறான். ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டகாலத்தை ஜப்பானிய வெற்றிகள் நிவர்த்திக்கப்போகிறதென்று கோயபல்ஸ் நினைக்கிறான் போலும். சமீபகாலத்தில் தென் மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியர்கள் ஏராளமான நீர்மூழ்கிகளையும், விமானங்களையும் திரட்டு கிறார்களென்பது உண்மையாகிலும், அதன்விளைவுகள் அதிகமாகயில்லை. ஏராளமான விமான நஷ்டங்களுடன் நேசநாடுகளின் ஒன்று அல்லது இரண்டு சிறிய கப்பல்களைதான் மூழ்கடித் திருக்கிறார்கள். ஆனால், ஏப்ரல் மாதம் 14 தேதிக்குப்பிறகு ஜப்பானியர்களுக்கு 900,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மூழ்கியிருக்கின்றன. பஸிபிக் சமுத்திரத்தில் ஜப்பா னியர்களின் வலிமை குறைந்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை.

தென்மேற்கு பஸிபிக்கில் ஜப்பானியர்களுக்கு 60 தளங்களிருக்கின்றன. முக்கியமான வைகள், வெவாக் (நியூகினியா) ரபால் (நியூபிரிடன்) டிரக் தீவு, கண்டாரி (ஸெலிபீஸ்), கோபாங் (டிமார் தீவு). இவைகளை நமது நேசதேச விமானங்கள் அடிக்கடி தாக்கிவருகின்றன. இந்தப்பிராந்தியங்களின் ஜப்பானியர்களின் நடவடிக்கைகள் நடைபெறும் பொழுது நேச தேசத்தாரும் ஸாலமன்ஸ் தீவுகளிலும், நியூகினியாவிலும், வெகுதூரத்திலுள்ள அலூஷியன் தீவுகளிலும் எதிரியின் முயற்சிகளை வீணாக்கிவருகிறார்களென்றும் சொல்லவேண்டும். சமீப காலத்தில் பூனபாடி என்ற தீவை ஆக்கிரமித்ததென்பதில் முக்கியத்வமிருக்கிறது. இந்தத்தீவு எல்லிஸ் தீவுகளுள் ஒன்று. பிஜித்தீவுக்கும் ஜிப்ரால்டர் தீவுகளுக்கும் நடுவேயுள்ளது. இதை நாம் பிடித்துவிட்டதால் ஆஸ்திரேலியாவிலிருந்து அமெரிக்காவுக்குச் செல்லும் கடல் மார்க்கத் தில் ஜப்பானியர் இனிமேல் ஆதிக்கம் பெறமுடியாது. சமீபகாலத்தில் வெவாக்குக்கு போய்க்கொண்டிருந்த எதிரியின் துணைக்காவல் படையை நாம் சிதைத்ததிலிருந்து தெற்குப் பிரதேசத்தில் நேசநாடுகளின் வலிமை அதிகரித்துவருகிறதென்று தெரிந்துகொள்ளலாம். ஸெலிபிஸிலுள்ள கண்டாரி என்னும் இடத்தை வெடிவிமானங்கள் தாக்கியதும் ஒரு சூசகம் தான். இதை வினு, முண்டாவை நவம்பர் மாதம் முதல் 110 தடவையும், கிஸ்காவை ஏப்ரல் மாதத்தில் மட்டும் 129 தடவைகளும் நமது விமானங்கள் தாக்கியிருக்கின்றன.

வி வி வி வி வி

**ஒற்றுமை ஏற்பாடு.** கூடிய சீக்கிரத்தில் ஜெனரல் டிகாலும், ஜெனரல் கிராடும் சந்தித்துப் பேசுவார்களென்று எதிர்பார்க்கப்படு கிறது. லண்டனுக்கும் ஆல்ஜியர்ஸுக்குமாக ஜெனரல் காட்ரூ நடமாடும் முயற்சிகளுக்கும் பலன் ஏற்பட்டுவிடும். பத்திரிகைகளில் வெளிவருகிறபடி சமாதானம் ஏற்பட்டுவிடுமென்று தோன்றுகிறது. இரண்டு விஷயங்களைப்பற்றித்தான் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக் கிறது. மத்திய கால பிரெஞ்சு நிர்வாக சம்பந்தமாக, பிரெஞ்சு தேசீய சங்கமும், வட ஆபிரிக்க நிர்வாகமும், பிரான்ஸுக்கு வெளியே வசித்துவரும் பிரெஞ்சு சபை மெம்பர்

களும், பிரெஞ்சு ரகசிய இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொண்ட ஒரு நிர்வாகம் ஏற்படவேண்டுமென்று டிகால் சொல்லுகிறான். பிரெஞ்சு சாம்ராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தின் பிரதிநிதிகளுமடங்கிய குடியரசு நாடுகள் சங்கம் ஒன்று ஏற்படவேண்டுமென்று ஜெனரல் கிராட் அபிப்பிராயப்படுகிறான். இரண்டாவது அபிப்பிராய பேதம் பிரான்ஸ் ஸ்வதந்திரமடைந்த பிறகு பிரான்ஸின் நிர்வாகத்தைப் பொருத்தது. இடைக்காலத்தில் ஏற்பட்ட அரசாங்கமே நிர்வாகம் செய்யவேண்டுமென்று டிகால் நினைக்கும் பொழுது, ஜனங்களின் ஓட்டுக்களின் பேரில் ஏற்கனவே பிரான்ஸிலிருந்த குடியரசு நிர்வாகம் ஏற்படும் வரையில் தளகர்த்தரே அமுல் நடத்தவேண்டுமென்று ஜெனரல் கிராட் அபிப்பிராயப்படுகிறார்.

வி வி வி வி வி

**ருஷ்யா—போலிஷ் உரவுகள்.** ருஷ்யா—போலிஷ் உரவுகள் திருப்திகரமாகயில்லை—கோயபெல்ஸ் தன்னால் முடிந்தவரையில் இரண்டு தேசங்களுக்குமுள்ள பிளவை அதிகப்படுத்த பிரயத்னம் செய்துவருகிறான். காடின் கதைகளுக்கு உபபலமாக ஒடெஸ்ஸாவில் கொலைகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ருஷ்யர்கள் புகோவினாவையும் பெஸ்ஸாரபியாவையும் ஆக்கிரமித்தபொழுது ருஷ்யர்கள் ருமேனியர்களைக் கொன்று சவங்களைப் புதைத்து விட்டதாகவும் அந்தச் சவக்குழிகளை இப்பொழுது கண்டு பிடித்துவிட்டதாகவும் ஜெர்மனி பிரசாரம் செய்துவருகிறது. இந்த சூழ்ச்சியை போலிஷ் அரசாங்கத்தார் கண்டுபிடித்துவிட்டார்கள். மேமீ 5-ம் தேதியன்று போலந்தின் தேசீய தினக்கொண்டாட்டத்தின் பொழுது ஜெனரல் ஸிகார்ஸ்கி சொற்பொழிவு செய்தான். லப்ளினிலுள்ள பத்து கிராமங்களை ஜெர்மானியர்கள், அதிலிலுள்ள ஜனங்களுடன் தீக்கிரையாக்கியதைப்பற்றிப் பேசும்பொழுது "இதுவும் ஜெர்மனியின் கொடுமைகளுக்கு ஒரு அத்தாக்ஷி. இதன் மூலம் ஜெர்மானியர்களுக்கும் போலிஷ் மக்களுக்குமுள்ள பிளவு அதிகரித்துவிட்டது" என்று சொன்னார். மேமீ 6-ம் தேதி பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "தொன்றுதொட்டு ஜெர்மானியர்கள் போலிஷ் மக்களுக்கும், ருஷ்யர்களும் பொதுவான பரம விரோதிகள். போலிஷ் மக்கள் ருஷ்யாவினிடமிருக்கும் சிநேகபாவத்தை விருத்தி செய்யவேண்டும் என்றும் ஜெர்மனியை எதிர்ப்பதில் இருவரும் ஒன்றுபட்டு நடக்கவேண்டுமென்றும் பிரியப்படுகிறார்கள்".

இந்த அபிப்பிராயங்களை மதித்து ஸ்டாலின் பதில் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதம் மேமீ 6-ம் தேதி வெளிவந்த டைம்ஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் "ருஷ்யாவுடன் ஸ்திரமான, நல்ல, சகோதரபாவமுள்ள சம்பந்தமுள்ள வலுவான ஸ்வதந்திரமுள்ள போலந்து நிலைத்திருக்கவேண்டுமென்பதுதான் ருஷ்யாவின் அபிப்பிராயம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஸ்டாலினின் பகிரங்கக் கடிதத்தையும் ஜெர்மானியர்களை இழிவாகப் பேசும் ஸிகார்ஸ்கியின் சொற்பொழிவையும் பார்த்தால் சமாதானம் ஏற்பட்டுவிடுமோ என்று தோன்றிற்று. இதற்குப்பின் ருஷ்யாவின் அயல்நாட்டு உதவி மந்திரி விடுத்த அறிக்கையும், அதற்கு போலிஷ் மந்திரி அனுப்பிய பதிலும் மறுபடியும் சண்டையை பலப்படுத்திவிட்டது. ருஷ்யா மந்திரி போலிஷ் அரசாங்கமும், பத்திரிகைகளும், உத்தியோகஸ்தர்களும் ஹிட்லருக்கு அனுதாபம் காட்டுகிறார்களென்று குற்றம் சாட்டுகிறான். ருஷ்யாவிலுள்ள போலிஷ் துருப்புகள் ஜெர்மனியை எதிர்த்து சண்டை போடக்கூடாதென்று போலிஷ் நிர்வாகம் உத்தரவிட்டிருக்கிறதாம். ருஷ்யாவிலிருந்து போலிஷ் ஜனங்கள் வெளியேறுவதை ருஷ்ய அரசாங்கம் தடை செய்திருக்கிறதென்று சொல்லுவது தவறு என்றும் அவன் சொல்லுகிறான். இதற்குப் பதிலாக, ருஷ்யாவிலுள்ள போலிஷ் துருப்புகளுக்கு முஸ்தீப்புகளேயில்லையென்றும், ஆகார வசதியளிக்கவில்லையென்றும், போலிஷ் ஜனங்கள் ருஷ்யாவைவிட்டுப் போகாதபடி அவர்களை ருஷ்யாவின் தூரதேசத்திலுள்ள பாகங்களுக்குக் கொண்டுபோய்விட்டார்களென்றும் ருஷ்யா பேரில் போலந்து புகார் செய்கிறது.

ஆகிலும் ருஷ்யாவிலிருந்து சமீப காலத்தில் வந்த தகவல் ஆறுதலளிக்கிறது: செம்படையுடன் ஒத்துழைப்பதற்காக ருஷ்யாவில் ஒரு போலிஷ் படை தயாராகவேண்டுமென்று ஸ்டாலின் உத்தரவிட்டிருக்கிறார்.

வி வி வி வி வி

**அமெரிக்காவில் நிலக்கரி தொழிலாளர் வேலை நிறுத்தம்.** இந்த வேலை நிறுத்தத்தில் அரை மிலியன் ஜனங்கள் ஈடுபட்டு விட்டார்கள். மிஸ்டர் ஜான் L. லெவியின் தலைமையின் கீழுள்ள தொழிலாளர்களின் ஐக்கிய சங்கத்துக்கும் அமெரிக்காவின் யுத்தத் தொழிலாளர் சங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட

மனஸ்தாபங்கள்தான் வேலை நிறுத்தத்திற்குக் காரணங்கள். யுத்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதால் சுரங்க வேலைக்காரர்கள் வேலைக்குத் திரும்பவேண்டுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு போட்ட உத்தரவையும் அவர்கள் புறக்கணித்து விட்டார்கள். சுரங்கங்களைக் கைப்பற்றிவிடும்படியாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆக்ஞாபித்துவிட்டார்.

இதில் சிக்கலான அம்சம் யாதெனில் மிஸ்ட்டர் லெவில் கலந்துகொண்டிருப்பதுதான். அவர் தனிப்பட்டிருக்கவேண்டுமென்ற கொள்கையுடையவர். இந்த சந்தர்ப்பத்தை அவலம்பித்து அதிகாரத்துக்கு வரவேண்டுமென்று எண்ணங்கொண்டவர். ஆகிலும் பிரச்னைகளைப் பரிசீலனை செய்து வருகிறார்களென்று புலப்படுகிறது. தொழிலாளர்களுக்கு ஜனாதிபதி பின்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார். "அவசியமான சாமான்களின் விலையைக் குறைத்துவிடுவோம். தேசம் பூராவும் வாடகை விகிதங்களை நிர்த்தாரணம் செய்துவிட்டோம். உணவுப் பொருள்களின் விலைவாசிகளை நிர்த்தாரணம் செய்வோம்".

வி வி வி வி வி

**புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் நெல் ஸப்ளை.** புதுக்கோட்டை உத்தியோகஸ்தர்களின் மத்திய கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் மூலமாக உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்தர சிப்பந்திகளுக்கும் அவர்களுக்கு ஒருவருஷத்துக்குத் தேவையான தானியத்தை விற்பனை செய்யும்படியாக புதுக்கோட்டை அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்களென்பதில் சந்தோஷமடைகிறோம். வருஷாந்திர தேவைகளுக்கு வேண்டிய தானியத்தின் கிரயத்தை உடன் காலத்திலேயே கொடுக்க முடியாதவர்களுக்கு, அவர்களுடைய விண்ணப்பத்தின் பேரில் கோவாபரேடிவ் சங்கங்களின் உதவி ரிஜிஸ்தரார் அவர்கள், ஒரு வருஷத்துக்குத் தேவையான தானியத்தை ஒதுக்கிவைத்து மாதா மதம் தொகை பெற்றுக்கொண்டு வேண்டிய அளவு கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

---

## மத்தியதரைக்கடல்.

(டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை).

ஜெர்மானியர்கள் வடஆபிரிக்காவிலுள்ள அவர்களின் கடைசி இடத்தையும், சரணகதியாகியோ, அல்லது அவ்விடத்தைக் காலிசெய்துகொண்டோ, அல்லது முற்றிலும் நிர்மூலப்படுத்தப்பட்டோ இழக்கும் நாள் நெருங்குகிறதால், சர்ச்சிலின் வார்த்தைகளை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். மத்தியதரைக்கடல் பிராந்தியத்தில் நேசநாடுகளின் தாக்குதலின் முக்கியமான நோக்கம் மத்தியதரைக்கடலின் ஆதிக்கத்தைத் திரும்பி பெறுவதேயாகும் என்பதுதான். அதாவது மத்தியதரைக்கடலின் மார்க்கமாகப்போகும் பிரயோஜனத்தைத் தாங்களே அனுபவிக்கவேண்டும். எதிரிகளுக்குச் சிறிதும் அதில் இடங்கொடுக்ககூடாது என்பதேயாகும். மத்தியதரைக்கடலின் தெற்கிலுள்ள நிலப்பரப்பின் ஆதிக்கம் அடைந்த காலத்து, நேசதேசங்கள் மத்தியதரைக்கடலைப் பிரயோஜனப்படுத்த முடியுமா என்ற கேள்வி எழலாம். சண்டை விமானங்களால், துணைக்காவலோடுகூடிய கப்பற்கூட்டம் கார்க்கப்பட்ட அனுபவத்தினின்றும் அவ்விடத்திலே நேசதேசங்கள் நெடுங்காலம் கடல் ஆதிக்கத்தை உடையதுவாய் இருக்கமுடியும் என்று தெரிகிறது. சிறிது காலத்திற்குமுன்பு மர்மான்ஸ்க் கடலில் ஒரு நேசதேசக் கப்பல்கூட்டம் ஒரு விமானங்கள் தூக்கிச்செல்லும் கப்பலின் காவலோடு சென்றாலும் சேர்ந்தாற்போல் 5 நாட்கள் இடைவிடாது ஜெர்மானியர்களின் விமானங்களுக்கு தப்பி, 100-க்கு 30 வீதம் நஷ்டத்தோடு கடலைத்தாண்டிச்சென்றது.

நேசநாடுகள் தரை தளங்களில் சண்டையிடும் விமானங்களை மத்தியதரைக்கடலின் தெற்குக் கடற்கரைகளில் வைத்துக்கொண்டால் மத்தியதரைக்கடலின் வழியாக நேசநாடுகளின் கப்பல்போக்குவரத்துக்கு உபயோகப்படுத்த முடியும். 'ரியர் அட்மிரல் ஹெச். ஜி. தர்ஸ்பீல்டு என்பவர் நேஷனல் ரிவ்யூ என்ற பத்திரிகையில், "இங்கிலீஷ் கால்வாயிலும், வடகடலிலும் எவ்வளவுதாராளமாக கஷ்டமின்றி நேசநாட்டின் கப்பல்கள் செல்லுகின்றனவோ அதைவிட தாராளமாகவும் கஷ்டமின்றியும் மத்தியதரைக்கடலில் ஒரு முனையினின்றும் மற்ற முனைக்கு நேசதேசக் கப்பல்கள் செல்லலாம்" என்று சொல்லுகிறார். பிரிடனில் எவ்வாறு சுலபமாய் அமெரிக்கச் சைனியங்களை அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்து வைத்திருக்கிறார்களோ அதுபோலவே வடஆபிரிக்காவிலும், நேசதேசச் சைனியங்களை வெகு சுலபமாய் கொண்டுவரமுடியும். இப்படி மத்தியதரைக்கடல் ஆதிக்கம் நேசதேசங்களுக்கு ஏற்பட்டு

விட்டால் சமீபக் கிழக்கு தேசங்களுக்கு சைனியங்கள் அனுப்புவதற்கு 10,000 மைல்கள் ப்ரயாணம் செய்யவேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடும். அமெரிக்கச் சைனியங்களை கொண்டுபோகும் போக்குவரத்துப் பாதையின் நீளமும் குறுக்கப்படும். அடுத்த நடவடிக்கை என்ன? இம்மாதிரி ஒவ்வொருவரும் கேட்கக்கூடும். ஸார்டினியாவிலோ, ஸிஸிலியிலோ, கிரீட்டிலோ, நம் நேசநாட்டுச் சைனியங்கள் இறங்குவதேயாகும். அடுத்தபடி நேசதேசச் சைனியங்கள் ஐரோப்பாவில் எவ்விடத்தில் படையெடுப்பார்களோ என்ற பீதி விரோதியிடையே அதிகரித்துவருகிறது.

---

## மத்தியதரைக்கடல்—நேசநாடுகளின் நீர்மூழ்கிகளின் நடவடிக்கைகள்.

மத்தியதரைக்கடலில் ஏதோ ஒரு இடத்திலுள்ள ஒரு நீர்மூழ்கிக் கப்பலிலிருக்கும் ராய்ட்டரின் விசேஷ நிருபர் ஏப்ரல் 25-ம் தேதி யன்று பின்கண்ட கட்டுரையை எழுதியிருக்கிறார்.

"மத்தியதரைக்கடலில் நேசநாடுகளின் வெற்றிகரமான நடவடிக்கைகளுக்குப் பின் அச்சு சாமான் கப்பல்களுக்குத் துணைக்காவல் அதிகரித்திருக்கிறது. லக்ஷியங்களை அவர்கள் கவனிக்கிறதில்லை. நமது நீர்மூழ்கிகளின் செய்கைகளினால் ஏராளமான அச்சுக் கப்பல்கள் மூழ்கியிருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகளின் சரித்திரம் எழுதப்படும்பொழுது நீர்மூழ்கிகள் செய்த அரிய சேவையைப் பற்றியும் எழுதப்படும்."

### அலமீன் யுத்தத்துக்குப்பின் 140 கப்பல்கள் பலி.

1942-ம் வருஷம் அக்டோபர்ீ 23-ம் தேதியன்று ஜெனரல் மாண்ட்காமரி யுத்தம் துவக்கியபின் ஆறுமாதங்களுக்குள்ளாக மத்தியதரைக்கடலில் அச்சுநாடுகளின் 18 யுத்தக் கப்பல்களும், 122 சாமான் கப்பல்களும், மூழ்கிவிட்டதாக கடற்படை இலாகாவிலிருந்து பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது.

எதிரியின் ஸப்ளை மார்க்கங்களைத் தாக்குவதுதான் மத்தியதரைக்கடலில் நமது நீர்மூழ்கிகள் செய்யவேண்டிய வேலையென்று நினைக்கவேண்டாம். கபடமாகச் சில அலுவல்களையும் அவைகள் நடத்த வேண்டியிருந்தது. பிரான்ஸிலிருந்து ஜெனரல் கிராட் தப்பி ஓடி வட ஆபிரிக்காவில் தலைகாட்டுவதற்குச் சாதகம் அளித்தது. நிர்மானுஷ்யமான வட ஆபிரிக்கக் கடற்கரையில் அமெரிக்க தளகர்த்தர்கள் இறங்குவதற்கும் அலுவல்களை முடித்துக்கொண்டு மறுபடியும் பிரயாணம் செய்வதற்கும் நீர்மூழ்கிகள் உபயோகப்பட்டன. லிபியாவில் எதிரிகளின் படை வரிசைகளுக்குப் பின்னால் கம்மாண்டோ வகுப்பைச் சேர்ந்த படைகளையும் கொண்டுபோய் நீர்மூழ்கிகள் இறக்கியிருக்கின்றன. மால்டாவில் ஸப்ளைகள் குறைந்தபொழுதும் விமானங்களுக்குத் தேவையான பெட்ரோல் குறைவுபட்டபொழுதும் நீர்மூழ்கிகள் உதவி செய்திருக்கின்றன. ஆகையால் நீர்மூழ்கிகளின் உதவிபெற்றுத்தான் நமது ஸ்பிட் பையர் விமானங்கள் மால்டாவில் ரோந்து செய்திருக்கின்றன.

### ஹிட்லரின் தந்திரம்.

ஹிட்லரின் உலக வெற்றி முறைப்படி ஐரோப்பாவும், ஆபிரிக்காவும் சேர்ந்த ஒரு கண்டத்தை அமைக்கவேண்டியது. இரண்டு கண்டங்களுக்கும் மத்தியிலுள்ள மத்தியதரைக் கடல் பிரதேசமானது ஸிஸிலுக்குச் சமீபத்திலுள்ள குறுகிய மார்க்கத்தில் 75 மைல்கள் உள்ளது. 1941-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 6-ம் தேதியோடு முடிவடைந்த யுத்தத்தில் எகிப்தை உதவியன்னியில் இதாலியப் படை கைப்பற்றிவிட முடியாது என்று வேவல் காண்பித்துவிட்டார். ஸிஸிலிக்குச் சமீபமுள்ள மார்க்கத்தை 500 முதல் 700 வரையுள்ள ஜெர்மன் விமானங்கள் ஸிஸிலி தளத்திலிருந்து காப்பாற்றி வருகின்றன. ஸிஸிலி அரங்கத்தில் பிரிடிஷ் கப்பற்படைகள் நடமாடமுடியாமலும் செய்து வருகின்றன. ஐரோப்பாவிலிருந்து ஆபிரிக்காவுக்கு ஏராளமான படை பலத்தை அனுப்புவதற்கு ரஸ்தாவையும் ஏற்பாடுசெய்து வருகிறது.

### பலமான முட்டுக்கட்டை.

இச்சமயத்தில்தான் காப்டன் ஸிம்ஸன் மால்டாவுக்கு வந்து மால்டாவிலிருந்து நடமாடும் பிரிடிஷ் நீர்மூழ்கிகளின் தலைவராக வேலையிலமர்ந்து இரண்டு வருஷகாலம் சுற்றுப் பிரயாணம் செய்தார். மத்தியதரைக் கடற்படையின் தளகர்த்தரான கன்னிங்காம் கடற்தளபதியிடமிருந்து அவருக்கு ஒரு செய்தி கிடைத்தது. "உன்னுடைய நீர்மூழ்கிகள் ஒன்று அல்லது இரண்டாக வெளியே செல்லுகின்றன. அச்சு நாட்டுக் கப்பல்கள் டிரிபோலிக்குச் செல்லாதபடி தடுப்பது உன் பொறுப்பு. மால்டா தளத்தை நீ உபயோகிக்கவேண்டும்.

இந்தக் காரியத்தை நிறைவேற்றுவது உன்னுடைய புத்திசாலித்தனத்தைப் பொருத்தது" என்று.

ஜெர்மனியின் ஆபிரிக்கப் படைக்கு சில நீர்மூழ்கிகள் இடைஞ்சல் செய்துவந்தன. 1943-ம் வருஷம் ஜனவரி மாதத்தில்தான் ஸிஸிலிக்கருகிலுள்ள சமுத்திரத்தில் பிரிடிஷ் நாசகாரிகள் வந்துசேர்ந்தன.

நீர்மூழ்கிகள் அச்சுநாட்டாரின் குறுகலான மார்க்கங்களில் சிரமப்படவேண்டியிருந்தது.

| | | |
|---|---|---|
| கிரீட்டிலுள்ள லிட்டினோ முனையிலிருந்து டொப்ருக்குக்கு | 175 | மைல்கள். |
| ஸிஸிலியிலுள்ள பான்ஸரோ முனையிலிருந்து டிரிபோலிக்கு | 240 | மைல்கள். |
| பான்ஸாரோ முனையிலிருந்து பெங்காஸிக்கு | 360 | மைல்கள். |

மணிக்கு 15 நாட்ஸ்கள் செல்லக்கூடிய அச்சுதேசக் கப்பல்கள் 120 மைல்கள் இருட்டில் இரவு 8 மணி முதல் காலை 4 மணிக்குள்ளாகத் தாண்டிவிடும். நீர்மூழ்கிகளுக்கு லக்ஷியங்களைக் கண்டுபிடித்துத் தாக்குவதற்கு நாலு முதல் 16 மணி நேரம்தான் அவகாசம் கிடைக்கிறது. ஆகையால் கூட்டமாகச் சென்று தாக்குவற்கு அவகாசம் கிடையாது. ஆகையால் கப்பல்களை வழிமறித்து அடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேலும் நீர்மூழ்கிகள் கடல் பரப்பில் தலைக்காட்ட முடியவில்லை. எல்லா மார்க்கங்களிலும் அச்சு விமானப்படை பலமான தற்காப்பு செய்துகொண்டு மீன் வெடிகளை உபயோகித்து வந்தது. இவ்விஷயத்திலும் ஒரு ருசிகரமான செய்தியிருக்கிறது. மத்தியதரைக்கடலில் தண்ணீருக்குள் 90 அடிக்குள்ளாக நீர்மூழ்கியிருந்தால் அதை நிச்சயமாக விமானங்கள் கண்டுபிடித்துவிடும். ஆகையால் விமான எதிர்ப்பை நிவர்த்திக்க தண்ணீருக்குள் நீர்மூழ்கி மூழ்குகிறதென்பது பிரயோஜனமற்றது. ஆபிரிக்கக் கரையிலிருந்து சென்று பிரிடிஷ் விமானங்கள் சென்ற ஆறுமாதங்களில் 11 அச்சு நாட்டு யூ படகுகளை மூழ்கடித்ததற்கும் மேற் சொல்லியதுதான் காரணம்.

## விளைவுகள்.

1941-ம் வருஷத்தில் ஆபிரிக்காவிலிருந்த அச்சுநாட்டுப்படைகள் 8 டிவிஷன் படைகளுக்கு ஒருநாளைக்கு 4,000 டன்கள் எடைமானமுள்ள ஸப்ளைகள் குறைந்தபக்ஷம் தேவையாயிருந்தது. அதாவது ஒருநாளைக்கு 2,500 டன்கள் எடைமானமுள்ள ஒரு கப்பல் செல்லவேண்டும். 1941-ம் வருஷத்திலும், 1942-ம் வருஷத்திலும் அச்சுநாட்டுக் கப்பல்கள் ஆபிரிக்காவுக்கு 720 தடவை சென்றன என்று கணக்கிடப்படுகிறது. இவைகளில் 216, அதாவது 30 சத விகிதம் கப்பல்களை நமது நீர்மூழ்கிகள் மூழ்கடித்துவிட்டன. 61 கப்பல்களை (அதாவது 8 சத விகிதம்) பலமாகப் பழுதாக்கிவிட்டன. மீதியிருக்கும் 60 சத விகிதம்தான் எகிப்தில் நடத்த யுத்தத்தை நடந்த ரோமலுக்கு உபயோகப்பட்டது. 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதியில் யுத்தம் ஆரம்பித்ததற்கு 6-வாரங்களுக்குமுன் நமது நீர்மூழ்கிகள் பலமாகத் தாக்க ஆரம்பித்ததின் பயனாக, மாண்ட்காமரியின் எதிர்ப்பை சமாளிக்க ரோமலுக்குப்போகும் ஸப்ளைகள்கொண்ட எண்ணெய்க் கப்பல்கள் தடைபட்டு காலம் தப்பி போய்ச்சேர்ந்தன. எண்ணெய்க் குறைவினால்தான் எல் அலாமீன் யுத்தம் ஆரம்பித்து நான்குநாட்கள் வரையில் ஜெர்மன் விமானப்படை ஒரே ஒரு தடவைதான் தாக்குதல் செய்தது. எல் அலாமீனுக்கும் எல் அகிலாவுக்கும் மத்தியிலுள்ள விமான ஸ்தலங்களில் 500 விமானங்களைப் போட்டுவிட்டு ஜெர்மனி ஓடியதற்கும் எண்ணெய்க் குறைவுதான் காரணம்.

இதே சமயத்தில் ஆபிரிக்காவுக்குச் செல்லும் நேசநாட்டு ஸப்ளைக் கப்பல்களையும் அச்சு நாட்டு யூ படகுகள் வழிமறிக்க ஆரம்பித்தன. அந்த யூபடகுகளுக்குப் பலவிதமான சாதனங்கள் கிடைத்தன. முதலாவதாக நேபிள்ஸிலிருந்து பெங்காஸிக்குப் போகும் தூரத்தைவிட லிவர்பூலிலிருந்து நன்னம்பிக்கைமுனையைச்சுற்றி ஏடனுக்குப்போகும் மார்க்கம் 50 மடங்கு அதிகமானது. இந்த 12,000 மைல்கள் கொண்ட நீண்ட மார்க்கத்தில் பாதி பாகத்திற்கு நமது கப்பல்களுக்கு விமானப் பாதுகாப்பு கிடையாது. விமானங்களின் ரோந்துகள் உள்ள இடங்களில் யூபடகுகள் நடமாடிக்கொண்டிருந்தன. ஆபத்து காலத்தில் அவைகள் அட்லாண்டிக் சமுத்திரத்தின் கருமையான தண்ணீருக்குள் மூழ்கிவிட்டன. சாமான் கப்பல்கள் வெகு வாரங்கள் வரையில் யூபடகுகளில் தாக்குதல்களுக்குட்பட்டிருக்கின்றன. மத்தியதரைக்கடலின் மத்தியப் பிரதேசத்தில் சிலமணி நேரம்தான் கப்பல்கள் மிதந்து செல்லவேண்டும். ஒரு பிரிடிஷ் ஸப்மரீனைத் தாக்குவதற்கு ஐந்து யூபடகுகள் தயாராக யிருந்தன. இவ்வளவு சௌகரியங்களிலிருந்தும் யூ படகுகளின் பிரயத்தனம் உபயோகப்படவில்லை. 1942-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் ஜூன்மாதம் முடிய நன்னம்பிக்கைமுனையைச்சுற்றி ஒவ்வொரு மாதமும் 50,000 துருப்புகள் சென்று கடைசியில் எகிப்தில் வெற்றிபெற்றன.

### மாலுமிகளின் சாமர்த்தியம்.

இந்த யுத்தத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலிருந்து பிரிடிஷ் நீர்மூழ்கிகளின் மாலுமிகளின் உயர்வு மறுக்கமுடியாதபடி ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இங்கு மூன்று உதாரணங்களை வெளியிடுவோம்.

(1) பிரிடிஷ் நீர்மூழ்கியின் தலைவர் ஒருவர் 13-வது வயதில் பிரிடிஷ் கப்பற்படையில் அமர்ந்தார். 4, 5 வருஷங்கள் கடற்படை கல்வி சாலையில் பயிற்சி பெறுகிறார். பெரிய கப்பலில் இரண்டு வருஷங்கள் வேலை பார்க்கிறார். மூன்று வருஷங்கள் நீர்மூழ்கிப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கிறார், நீர்மூழ்கிகளில் கீழ்தர உத்தியோகஸ்தராக இரண்டுவருஷம் வேலை பார்க்கிறார். பிறகு மூன்று மாதங்கள் தலைவர்கள் பயிற்சி பெறுகிறார். கரையோரமாக சஞ்சரிக்கும் நீர்மூழ்கிகளில் உயர்தர அதிகாரியாக வேலை பார்க்கிறார். அதன் பிறகுதான் அவரை சமுத்திரத்தில் செல்லும் நீர்மூழ்கிகளின் கம்மாண்டராக நியமிக்கிறார்கள். பார்பெ என்னும் நீர்மூழ்கியின் கம்மாண்டர் 13 வருஷம் நீர்மூழ்கிகளில் வேலை பார்த்திருக்கிறார். அவர் கீழ் வேலை செய்யும் 12 நபர்களும் மொத்தமாக 114 வருஷங்கள் நீர்மூழ்கிகளிலேயே வேலைபார்த்திருக்கிறார்கள்.

இவ்விஷயங்களை முதல் பிரயாணத்திலேயே சரண் புகுந்த ஜெர்மன் யூபடகு 570 நம்பர் நீர்மூழ்கியின் மாலுமிகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள். யூ படகிலிருந்த கம்மாண்டரும் மற்ற ஐந்து உத்தியோகஸ்தர்களும், 15 சில்லரை அதிகாரிகளில் 11 பேர்களும் 26 வேலையாட்களில் 25 பேர்களும் நீர்மூழ்கி ஓட்டுவதில் அனுபவம் வாய்ந்தவர்களேயில்லை.

(2) 1940-ம் வருஷம் வேனீர் காலத்தில் மத்தியதரைக்கடலில் 'அச்சுநாடுகளிடம் 23,31,291 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களிருந்தன. 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 23-ம் தேதி முதல் 1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 23-ம் தேதிவரையில் பிரிடிஷ் நீர்மூழ்கிகள் 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள, அதாவது 43 சதவிகிதம், கப்பல்களை மூழ்கடித்திருக்கின்றன.

1939-ம் வருஷத்தில் பிரிடனுக்கும் நேசநாடுகளுக்கும் 30,840,000 டன்கள் எடைமானமுள்ள கப்பற்படையிருந்தது. 1941-ம் வருஷம் முடிய யுத்தம் ஆரம்பித்து 28 மாதங்களில் அச்சுநாட்டு யூபடகுகள் 72,50,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மூழ்கடித்தது. அதாவது 24 சத விகிதம்தான்.

(3) இந்த வித்தியாசங்கள் நீர்மூழ்கியை மற்றொரு நீர்மூழ்கி எதிர்த்தால் துலங்கிவிடும். அப்ஹோல்டர் என்ற பிரிடிஷ் நீர்மூழ்கி மூன்று யூ படகுகளை மூழ்கடித்துவிட்டது. 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மெஸ்ஸினா ஜலசந்திக்கருகில் நடமாடிக்கொண்டிருந்த மற்றொரு பிரிடிஷ் நீர்மூழ்கி இதாலியர்கள் புதிதாய்க் கட்டியிருந்த அம்மிராக்னியோ மில்லோ என்னும் யூ படகை மூழ்கடித்துவிட்டது.

---

## பால்கன் நாடுகளின் கவலை.

(லியோனார்ட் கிர்ஷென்.)

வசந்த காலம் வந்துவிட்டது. நாலாவது வருஷ வசந்த காலத்தில் பால்கன் நாடுகளுக்கு அதிகக் கவலையையும் தலை வலியையும் உண்டாகி விட்டது. இதற்குக் காரணம் ஹிட்லர்தான். ஹிட்லரே பிரிடிஷாரும் அமெரிக்கர்களும் எவ்விடத்தில் தாக்குவார்களோ என்று புலப்படவில்லையென்று சொல்லியிருக்கிறான்.

ஜெர்மனியின் வழவழப்பையும் கவலையையும் பால்கன் நாடுகள் தான் நன்றாக அறிந்திருக்கின்றன. இயற்கையாகவே ராணுவ முறையிலும் ராஜீய, அமைப்பிலும் பலஹீனமான இந்த நாடுகள் ஜெர்மனிக்கு அடிமைப்பட்டு, ஜெர்மனியைத் தங்களுக்கு ரக்ஷகனாக ஏற்றுக்கொண்டன. இப்பொழுது தங்கள் தேசங்களின் முடிவு வந்துவிட்டதென்று அறிகிறார்கள்.

ருஷ்யப் போர்முனையில் மூன்றில் இரண்டு பங்கு படைபலம் நஷ்டமான பிறகு, ருமேனியாவானது துருப்புகளைக் காவு கொடுத்ததின் பலனென்ன என்று நிதானித்துப் பார்க்கிறது. எதிர்ப்புக் கக்ஷிக்காரர்கள் ஆக்ஷேபிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகிலும் அவர்களுடைய நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெறவில்லை. கபடமாக நடைபெற்றுவருகின்றன. குழப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஸர்க்காரின் நடவடிக்கைகளைக் கண்டித்து எதிர்க் கக்ஷித்தலைவர் அனுப்பிய ரிபோர்ட்டுக்கு ருமேனிய குயிஸ்லிங்கான மார்ஷெல் அண்டோனெஸ்க்கு ஸர்க்கார் நடவடிக்கையை ஆதரவு செய்து

60 பக்கங்கள் அடங்கிய ஒரு புஸ்தகத்தை வெளியிட்டான். இந்தப் பிரசுரத்தை எதிர்க் கக்ஷிக்காரர்கள் நாடெங்கும் பரவச் செய்தார்கள். இதன் விளைவென்ன. ராஜவம்சத்தாரும் யதேச்சாதிகாரியும் எழுதிய சரித்திரங்களையும், கடிதங்களையும் உத்தரவன்னியில் மறு பிரசுரம் செய்கிறவர்கள் தண்டிக்கப்படுவார்களாம். ஆகையால் அண்டோனென்ஸ்க்கு வெளியிட்ட புஸ்தகத்தை ஜனங்களிடையே பரவச் செய்வதற்கு காவல் முகாமில் அடைத்து வைப்பதென்ற சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறது.

பல்கேரியாவில் ஜனங்களுக்கு ரசமான பேச்சுக்களைப் பரப்பும்படி அரசாங்கத்தார் பிரசாரம் செய்து வருகிறார்கள். மந்திரிகளும், உப தலைவர்களும், நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து கோபம்கொண்ட ஜனங்களிடம் அச்சு நாட்டார்களை ஆதரித்துவரும் அரசாங்கத்தின் கொள்கையானது ஞாயமானது என்று சொல்லி வருகிறார்கள். ஒரு சமயம் போக்குவரத்து மந்திரியான ராடோஸ்லவாவ் என்பவர் 1,500 ரெயில்வே தொழிலாளர்களை டார்னோவே என்னுமிடத்தில் நடைபெற்ற மாகாண மீட்டிங்குக்கு அழைத்துச் சென்று அவர்களை கர கோஷம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். பல்கேரியர்கள் ருஷ்யர்களை ஆதரிக்கிறார்கள். ஸாரின் ஆக்ஷிக்கும், தற்போதய ஆக்ஷிக்கும் வித்யாசங்களிருக்கின்றன என்று பல்கேரிய மக்களிடம் புகட்டுவது மிகவும் கடினமானது. ஜனங்கள் இந்தப் பேச்சுக்களை நம்பவேயில்லை. எப்படியிருந்தாலும் ருஷ்யர்களுக்குள் பேதமில்லையென்றுதான் அவர்கள் நினைக்கிறார்கள்.

யூகோஸ்லாவியாவில் ஜெனரல் ட்ராகா மகிலோவிச்சும் அவனுடைய 100 ஆயிரம் பேர்களும் செய்துவரும் யுத்த முயற்சிகள் புராண கதையாகயிருக்கின்றன. இடைவிடாமலும், சளைப்பில்லாமலும் அவர்கள் ஜெர்மானியர்களையும், இதாலியர்களையும் தொந்தரவு செய்து வருகிறார்கள். இதாலியர்கள் உத்தியோக முறையில் வெளியிட்ட புள்ளி விவரங்களில் இருந்து சென்ற வருஷத்தில் பால்கன் நாடுகளிலிருந்த இதாலியர்களின் கணக்குகள் வட ஆபிரிக்காவில் நஷ்டமடைந்தவர்களைவிட அதிகமென்றும், ருஷ்யாவில் இறந்தவர்களைவிட குறைச்சலென்றும் வெளியாகுகிறது. மகிலோவிச்சுக்கு இது பெருமைதான்.

இதாலியர்களின் மதிப்பு என்ன. கைது செய்யப்பட்ட இதாலிய உத்தியோகஸ்தர் ஒரு துப்பாக்கிக்கு பதிலாக விடுதலை செய்யப்படுகிறார். ஒரு இதாலியச் சிப்பாக்குப் பதிலாக ஒரு சாக்கு மாவும் அல்லது நூற்றுக்கணக்கான தோட்டாக்களும் கொடுக்கப்படுகின்றது. இதாலிய தளகர்த்தருக்குப் பதிலாக மகிலோவிச் ஒரு லேசான டாங்கு பெற்றுக்கொள்ளுகிறான்.

ரொம்பவும் கஷ்டப்பட்ட கிரேக்கர்கள் களைத்துப்போய் சோர்ந்து நித்திரையிலிருந்தவர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். கிரேக்க கொரில்லாப் படைகள் பாலங்களையும், ரசாயன தொழிற்சாலைகளையும் உடைத்துவிடுகிறார்கள். மேற்கு மாஸிடோனியாவிலுள்ள இதாலியர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளுகிறார்கள். இதாலிய விமானப்படை வந்துதான் இவர்களை விரட்டி இதாலியர்களை விடுவிக்கிறது. இம்மாதிரியான யுத்தத்தில் இதாலியர்கள் நிபுணர்கள். இதைப் பார்த்தால் அபீஸினியாவில் நடைபெற்ற யுத்தம் ஞாபகத்துக்கு வருகிறது. புரோனே முஸோலினியும், சியானோ பிரபுவும் தலைமை வகித்த படைகள் விஷ வாயுவு நிரம்பிய புதர்கள் வழியாக ஓடிக்கொண்டிருக்கும் ஸ்திரீகளையும், குழந்தைகளையும், மிஷின் பீரங்கிகளாலும் வெடிகுண்டுகளாலும் தாக்கியது போலிருக்கிறது.

இவைகள் நடைபெற்று வரும்பொழுதும், அபாயம் நெருங்கி வருகிறது. புகாரெஸ்ட் காலி செய்யப்படுகிறது. ஸோபியா, வார்ணு, பர்காஸ், மற்ற பல்கேரிய நாடுகளும் பின்பற்றும். பாதுகாப்புக் குழிகள் தோண்டப்படுகின்றன. பொக்கிஷங்கள் நாட்டுப் புறங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. யுத்தக் கொடுமைகள் அதிகரித்துவிட்டன. அச்சு நாடுகள் செய்த குற்றச் செய்கைகளுக்குச் சரியான பதில் கிடைக்குமென்று பால்கன் நாடுகள் அறிந்துவிட்டார்கள்.

---

## நார்வேயில் நாஸிகளின் பயங்கர ஆக்ஷி.

### ஜெர்மன் வெற்றியில் நம்பிக்கை குறைகிறது.

**நார்வீஜிய நிருபர்.**

*(The Times—Jan. 13, 1943.)*

நாஸிக்கட்சியின் கொடுமை ஆக்ஷியில் கிட்டத்தட்ட 3 வருஷங்கள் வாழ்ந்தபிறகு, நார்வீஜியன் மக்கள் அதிகமான சிரமமும், மன வருத்தமும் அனுபவிக்கவேண்டி இருக்கிறது.

ஆனல் ஜெர்மானியர்கள் செய்யும் ஒவ்வொரு புது அக்கிரமமும் அம்மனிதர்களை கல் மனதினரா யும், எதிர்ப்பை பலப்படுத்திக்கொள்ளும் தன்மை உடையவர்களாயும் செய்கிறது. இந்தப் புது வருஷம் வந்தது முதல் அவர்களுக்கு நிச்சயமான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யாவிலும், வட ஆபிரிக்காவிலும், பஸிபிக்கிலும் நேசதேசங்கள் வெற்றியடைந்து வருவதை நார்வீஜிய மக்கள் பார்க்கிறார்கள். நாஸிகள் இந்தச் சண்டைகளின் உண்மையான செய்திகளையெல்லாம் சமாசாரப் பத்திரிகைகளில் வராமலேயே செய்கின்றனர். இவ் விவரங்களைத் தெரிந்துகொள்ள நூற்றுக்கணக்கான அனுமதிக்கப்படாத வழிகளில் வரும் ரிபோர்ட்டுகளிலிருந்து 'இந்த நார்வீஜியர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை. ஜெர்மானியர்களுடையவும், அவர்களின் சொந்த குவிஸ்லிங் கட்சியாளருடைய முகங்களினின்றும், அவர்கள் நடத்தைகளினின்றும், விபரமாயும், மனத் திருப்திகரமாயும் இவ்விபரங்கள் தெரிந்து கொள்ளலாம். ஜெர்மானியரிடம் கிலி அதிகரித்திருக்கிறதென்று அவர்கள் நன்ருய் அறிந்துகொண்டிருக்கிருர்கள்.

போனவருஷம் அக்டோபர் முதலிலே, டிராண்டிஹிம் என்ற நகரத்தில் கொடுமை உச்சஸ்தானத்தை அடைந்தது. நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதை அக்டோபர் 6-ந்தேதி வரை வெளியில் பகிரங்கப்படுத்தப்படாவிட்டாலும், டிராண்டிஹிமிலுள்ள ஜெர்மானியர்களுக்கு, இவ்விதம் ஏற்படும் என்பது அக்டோபர் 3-ம் தேதியே தெரியும். டிரோயெண்டிரேக் என்ற ஜில்லாவில் இச்சட்டம் முதலில் அமுலுக்கு வந்தது. அந்த ஜில்லா ராணுவமுள்ளதாக இருந்ததோடுகூட கிரேனிலுள்ள இளம் வயதுடைய 24 குடியான வர்கள் யுத்த தளவாடங்களை ஒழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதியாகப் பிடிப்பதற்கும் நல்ல முகாந்திரமாக இருந்தது. அவர்களின் கொலைத் தீர்மானம் உடனே இரண்டு நாட்களில் நிறைவேற்றப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

**பிணையாளிகளின் கொலை.**

ஏற்கனவே 10 ஆட்களை டிராண்டிஹிமில் சுடப்படவேண்டும் என்று முடிவு செய்யப் பட்டிருந்தது. முக்கியமான பிணையாளி ஒருவன் தேசத்தில் மற்றொரு பாகத்தில் இருந்ததால் மற்றவர்களின் கொலை தண்டனையை நிறைவேற்றிய நாளுக்கு அடுத்த நாள் வரையில் ஜெர்மன் ரகசிய போலீசாரால் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனல் பத்துப் பிணையாளிகள் தண்டிக்கப் படவேண்டும் என்று அவர்கள் நிச்சயித்து இருந்ததால் காப்டன் பெர்க் என்ற ஒரு முதன்மையான நார்வீஜியன் அவன் சொந்த ஊரிலே கைது செய்யப்பட்டு சுடப்பட்டான். நடுப்பகலிலே அவன் டிரெண்டிஹிமில் வீதி வழியே நடந்து போய்க்கொண்டிருக்கும்போது பார்க்கப்பட்டான். சிறிது நேரத்தில் அவன் கொலைத் தண்டனை பிரசுரிக்கப்பட்டது. அக்டோபர் 6-ந்தேதி டெர்பேராவன் என்ற ஜெர்மன் ராணுவத் தலைவனும் ரெடியாஸ் என்ற ஜெர்மன் ரகசியப்போலீஸ் தலைவனும் போலீஸார் பின்வா மிஷின் பீரங்கிகளுடைய மோட்டார் சைகிளில் நகரத்தைச் சுற்றினர்கள். அதேசமயத்தில் ஆஸ்லோவிலிருந்து மற்றும் பல ஜெர்மன் ரகசியப் போலீஸாரும், எஸ். எஸ். துருப்புகளும், நார்வீஜிய போலீஸரும் இங்கு கொண்டுவரப்பட்டனர். டெர்போவென், அவன் காப்பாளர்களோடு சிறிது கூடிப்பேசிய பின் டிராண்டிஹிமின் ஜனங்களுக்கு "ஜெர்மானியர்கள் அவர்கள் தீர்மானத்தை நடத்தியே தீருவார்கள்" என்பதை வெளிப்படையாக அறிவித்தார். டிராண்டிஹிமிலிருக்கும் ஜனங் களில் ஒரு சிலரே இம்மாதிரி டிராண்டிஹிமில் 10 முக்கியமானவர்கள் கொலை செய்யப் பட்டார்கள் என்பதைக்தெரிந்துகொண்டனர். அதுவும் இரவு 8 மணிக்கு மேல் அறிவிக்கப் பட்டது. அவர்களின் உறவினர்களுக்குக்கூட தெரியப்படுத்தப்படவில்லை. தங்கள் கணவன்மார் களுக்கும், தகப்பன்மார்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்பட்ட இந்த தண்டனையை, அவர்களின் உறவினர்கள் மறுநாட்காலையில் சமாசாரப் பத்திரிகைகளினின்றும் தான் தெரிந்து கொண்டனர்.

குஸ்லிங் கட்சியினரின் ஆட்சியில் இன்றைய தினம் குழப்பம் அதிகமாய் இருக்கிறது. அந்தக் கட்சியின் தலைவர் யாருக்கும், அந்தக் கட்சியில் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிருர் கள் என்று தெரியாது. ஆகையால் ஏற்கனவே அங்கத்தினர்களாய் இருப்பவர்களுக்கு கட்சியில் சேரும்படி பயமுறுத்தி பல கடிதங்கள் கிடைத்தன. டிராம்ஸோவின் குஸ்லிங் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவர் வடக்குநார்வேயில் மேற்படிகட்சியின் அங்கத்தினரில் பெரும் பான்மையோர் அந்தக் கட்சியை விட்டு விலக அனுமதித்தால் விலகிவிடத்தயாராயிருக்கிருர் கள் என்று கூறினர். ஜெர்மானியர் சண்டையில் ஜயமடைய முடியாது என்று அவர்கள் இப்பொழுது நம்புகிருர்கள். எல்லாவற்றையும்விட அவர்கள் சமாதானத்தையே அதிகமாய் விரும்புகிருர்கள்.

ஜெர்மன் எஸ். ஏ. யின் தலைவரான விக்டர் லட்சு என்பவர், செப்டம்பர் மாதத்தின் கடைசிவாரத்தில் நார்வே சென்றதானது அவன் ஜெர்மன் ராணுவ தலைவரான டெர்போவனைச் சந்திக்க, என்று ஜெர்மானியரின் சமாசாரப் பத்திரிகைகள் கூறின. அப்படிச் சொன்னாலும் அப்படிச் சென்றதில் ஏதோ விசேஷம் இருக்கிறது. குஸ்லிங் கட்சியினரிடையே ஏற்பட்ட மனோவேறுபாடுகளும் முக்கியமாய் குஸ்லிங் எஸ். ஏ. துருப்புகளான ஹர்டினிடையே ஏற்பட்டிருந்த அதிருப்திதான் காரணம். இது ஜெர்மனியில் நாஸிக் கக்ஷிகளுக்கிடையே ஏற்பட்ட கலகத்தை ஞாபகப்படுத்துகிறது. அதிருப்தியுடையவரைக் கண்டித்து கலகத்தை அடக்குவதில் லெட்சு ஒரு 'நிபுணர்' என்று எல்லோராலும் கருதப்பட்டு வந்தார். அதாவது நார்வேயின் அவசரமான பிரயாணத்திற்கு இதுவே முக்கிய காரணமாயிருக்கலாம்.

### ருஷ்யாவிற்குச் சேனை.

இலையுதிர்காலத்திலே, கிழக்கே யுத்த அரங்கத்தில் சண்டையிட 18 முதல் 45 வயது, வரையுள்ள 3,000 ஹர்ட்கட்சியின் அங்கத்தினர்களைக் கூட்டுமாறு குஸ்லிங் உத்தரவிட்டபொழுது ஹர்ட் கட்சியினிடையே ஏற்பட்டிருந்த அதிருப்தி உச்சஸ்தானத்தை அடைந்தது. மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் குஸ்லிங் கட்சியின் எல்லா ஆண்களும் கூட்டப்பட்டனர். இவ்வாறு கூட்டியது அதிவேகமானதும் அபாயகரமானதுமான எதிர்ப்பு ஏற்பட்டது. படை கூட்டுவதற்கு குஸ்லிங் கட்சியினர் படைகளை உபயோகப்படுத்த வேண்டியிருந்தது. சேர மறுத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த விதமாகத்தான் குஸ்லிங் நார்வீஜியன் சேனை சேர்க்கப்பட்டதென்றாலும் 3,000 பேர்கள் கிடைக்கவில்லை.

ஹர்டினரின் மனதை மாற்றுவதற்குவேறு சில நடவடிக்கைகள் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. நவம்பர் 21-ம் தேதி லட்சு ஆஸ்லோவில் வந்து சேர்ந்தார். இரண்டொரு நாட்களில் ஹர்டினர் நார்வீஜிய யூதர்களின்பேரில் ஏவிவிடப்பட்டனர். எவ்வளவு தூரம் இது ஹர்டினருக்கு திருப்தியாயிருக்கும் என்பதை பின்புதான் தெரியும். கிழக்கு அரங்கத்தில் யுத்தம் செய்துகொண்டிருந்த நார்வீஜிய சேனை எதிர்பாராத சம்பவங்களால் கலைக்கப்பட்டது. அவர்கள் ஜெர்மன் சைனியத்தோடு சேர்க்கப்பட்டனர்.

ஜெர்மனியின் நிலைமை மிகவும் சந்தேகமானதாய் ஆக ஆக, ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களிலே கொடுமையும் கொள்ளையடிப்பதும் அதிகரிக்கிறது. நார்வீஜிய மக்களின் ஒவ்வொரு அவுன்ஸ் சாப்பாடும் கொள்ளையடிக்கப்பட்டது. அவர்களுடைய கரி, மீன், காய்கறிகள் எல்லாம் ஜெர்மானியர் எடுத்துக் கொள்ளுகின்றனர். சிறிய உணவாக வள்ளிக்கிழங்குகளை சத்தில்லாததும் சாற்றுடன் கலக்கப்பட்டதுமான உருளைக் கிழங்குகளும்தான் நார்வீஜியர்களுக்கு ஆகாரம். வெண்ணை கிடைக்கும். ஆனால் ரொட்டி கிடைப்பதில்லை. ஒருவரும் பட்டினி இல்லாவிட்டாலும் பசியோடிருக்கின்றனர். இவைகளுக்கு எதிரிடையாய் நேசதேச சைனியங்களின் வெற்றிகளாலும், முயற்சிகளாலும், நாஸி எதிரிகளைத் துரத்தி அடிப்போம் என்ற முழு நம்பிக்கையோடு கூடிய புது வருஷத்தை நார்வீஜியர்கள் கண்டு வாழ ஆரம்பிக்கின்றனர்.

### நார்வேயில் நாஸி கொடுமைகள்.

டிராண்டிஹிமில், அக்டோபர் மாத முதலில் நடந்த கொலை தண்டனைகளைப்பற்றி மேலும் மேலும் அதிக விபரங்கள் கிடைத்திருக்கின்றன. நார்வேயிலும் ஜெர்மானியர்கள் ஜெயித்த மற்ற நாடுகளிலும் ஜெர்மானியர்கள் எத்தகைய காமக் கொடுமைகள் செய்து வருகின்றனர் என்பதற்கு இவைகள் ஒரு உதாரணமாயிருக்கின்றனர். பிணையாளர்களுக்கு கொலை செய்யப்பட்ட 10 முக்கியமான டிராண்டிஹிம் மக்கள் அவர்களின் சொந்த சாவைப் பற்றி ரேடியோ மூலம்தான் அறிவிக்கப்பட்டது. ஒலிபரப்பிய பின் மறுநாள் காலையில் தான் அவர்கள் சுடப்பட்டனர்.

இதனை ஜெர்மானியர்கள் சாமர்த்தியமான வழி என்று கருதி உடனே இன்னும் 24 நார்வீஜியர்களை கொலை செய்தனர். அவர்களும் தாங்களை கொலைசெய்யப்பட்டுவிட்டதாய் சொல்லப்பட்ட மறு நாளே சுடப்பட்டனர். அவர்களும் தாங்கள் கொலைசெய்யப்படப் போகிறதைப்பற்றி ஒலிபரப்பின் மூலம் தெரிந்துகொண்டனர்.

பால்ஸ்டாட் என்னும் கைதிகள் முகாமில் ருஷ்யாவிலிருந்து கொண்டுவந்திருந்த கைதிகளைக் கொண்டு புதைகுழிகள் வெட்டச் செய்தனர். யார் கொல்லப்படப் போகிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. கைதிகளிடமிருந்த பரபரப்பு சகிக்க முடியாததாகயிருந்தது. புதன்கிழமை, கிரேனிலிருந்து வந்தவர்களில் 15 பேர்களை 8 மணிக்கெல்லாம் கொணர்ந்து நிற்கச் செய்தனர். இவ்வாறு இரவு $7\frac{1}{2}$ மணி வரையிலும் ஆக $11\frac{1}{2}$ மணி நேரம் நிறுத்தி

வைக்கப்பட்டிருந்தனர். பிறகு அவர்களின் சாவைப்பற்றி வெளியிடப்போகும் அறிக்கையைக் கேட்க அழைக்கப்பட்டனர். அடுத்த நாள் அந்தக் குழிகள் தோண்டிய இடத்திற்கு கூட்டிச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களை நிர்வாணமாக்கி சுடப்பட்டனர். கடைசியாக சுடப்பட்ட 9 பேர்களும் மேற்சொல்லியபடி நடத்தப்பட்டு சுடப்பட்டனர்.

---

## விமானப் போக்குவரத்தில் புதிய ஏற்பாடு.

(டைம்ஸ் பத்திரிகை).

சில விஷயங்கள் ஸ்பஷ்டமானவை. இரண்டு யுத்தங்களுக்கும் மத்தியில் போக்குவரத்துக்காக ஒரு தேசத்தின் பேரிலுள்ள ஆகாயத்தின் பேரில் மற்றொரு தேசத்தின் விமானம் பறக்கக்கூடாதென்ற கொள்கை போய்விட்டது. தேசத்தின் மேலேயுள்ள ஆகாயப்பரப்புக்கு அந்த தேசம் பாத்தியம் கொண்டாடுவதும் பரஸ்பர ஒப்பந்தம் ஏற்பட்டாலொழிய அயல் நாட்டின் பேரிலுள்ள ஆகாயத்தில் அந்நிய நாட்டுவிமானம் செல்லக்கூடாது என்ற கொள்கைகளும் குறுகிய நோக்கங்கள். இந்த அபிப்பிராயங்கள் எல்லைச் சரகங்கள் வரையில் ஒரு நாட்டின் அமுல் செல்லுமென்ற அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டவை. புதிய உலக அமைப்பில் இந்த அபிப்பிராயம் நிலைத்து நிற்கமுடியாது. தேசங்களுக்குள்ளிருக்கும் மாத்ஸர்யத்தை விருத்தி செய்ய ஆகாயத்திலும் எல்லைச் சரகங்கள் நிர்மானிக்கக் கூடாது. இந்தத் தோற்றம் அற்றுவிட்டால் ஒவ்வொரு தேசத்துக்கும் தனிப்பட்ட விமானப் படை அவசியமென்றும் இதர நாடுகளுடன் போட்டி போடவேண்டுமென்ற மனப்பான்மையும் போய்விடும். சர்வதேசங்களும் ஒன்றுபட்டு சர்வதேசங்களுக்கும் உபயோகப்படக்கூடிய விமானப்படை ஏற்படுத்துவதென்பது சிரம சாத்தியமான காரியம். இதை நன்றாய் பரிசீலனை செய்து விவாதம் செய்துதான் நிருவவேண்டும். இந்தச் சிக்கலான பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு முக்கியமான விஷயம் கவனர்கமுள்ளது. யுத்தத்தின் கோலாகலத்தினின்றும் புலப்படும் புதிய உலக அமைப்புக்கு நான்கு வலுவான ஆதரவுகளிருக்கின்றன. அதாவது பிரிடிஷ் சாம்ராஜ்யம், அமெரிக்கா, ருஷ்யா, சைனா. இவைகள் பூகோள அமைப்பில் தனிப்பட்ட நாடுகள். யுத்தத்துக்குப்பின் சர்வதேச விமானப்படை அமைப்பு ஏற்பாட்டில் இந்த நான்கு தேசங்களும் முக்கியமான பங்கு எடுத்துக்கொள்ளும். இன்னும் சில நாடுகளும் கலந்து கொள்ளக்கூடும். யுத்த காலத்தில் ஐக்கிய தேசத்தார்களின் விமானப்படை ஒத்துழைத்துவருவதென்பது வருங்காலத்திய சமாதானகால வியாபார முறைகளுக்கு லாயக்கான பொதுவான விமானப்படை திட்டத்தை ஏற்படுத்துவதற்கு அஸ்திவாரமாகவும் அடிப்படையாகவுமிருக்கிறது.

வெற்றிக்குப்பின் சமாதானம் நிலை நிற்கவேண்டுமென்றால் சர்வதேசங்களுக்குள் ஒத்துழைப்பு வேண்டும். ஒத்துழைப்புக்குப் பொதுவான விமானப்படை அவசியமாகும். யுத்தத்தினால் அழிவுதான் ஏற்படுமென்பதில்லை. யுத்த அவசியத்தினாலும் துரிதமாகச் செல்லவேண்டுமென்ற நோக்கத்தினாலும் விமானப்படை மிகுதியாக அதிகரித்திருப்பதிலிருந்து மனித சமூகத்துக்கே ஒரு புதிய நற்காலம் பிறந்துவிட்டதென்றே சொல்லலாம். திறமை வாய்ந்த அநேக நூறாயிரம் மனிதர்கள் விமானிகளாகப் பயிற்சி பெற்றுவிட்டார்கள். விமானங்களை உற்பத்தி செய்வதற்காக பெரிய தொழிற்சாலைகள் உண்டாகிவிட்டன. உலகம் பூராவிலும் சிறியதும், பெரியதுமான அநேக விமானங்கள் உபயோகமுள்ள வகையில் கட்டப்பட்டிருக்கின்றன. யந்தர வேலையும் விசேஷ முன்னேற்றமடைந்து உலக க்ஷேமத்தில் புதிய அவசரம் ஏற்பட்டுவிட்டது. தேசங்களுக்குள்ள தூரமும் கால அளவும் குறைவுபட்டுவிட்டன. யுத்தம் முடிந்தவுடன் இப்பேற்பட்ட மகத்தான சேமிப்புகளும், ஐச்வர்யங்களும், விளைவுகளும் திடீரென்று அற்றுப்போய்விடுமென்று நினைக்க ஞாயமில்லை. யுத்தத்தின் மூலம் உண்டாகும் லாபங்களை சமாதான முறைகளில் உபயோகப்படுத்த முயற்சி செய்யப்படுமென்பதில் சந்தேகமில்லை. நாம் எதிர் பார்க்கிறபடி போக்குவரத்து விமானப்படையானது பரஸ்பர தேசங்களுக்குள் போட்டிக்காக ஏற்படுத்தப்போவதில்லை. மனிதர்களும், சாமான்களும் நடமாடுவதற்கு ஒன்றுக்கொன்று ஒத்தாசைக்காகத்தான் ஏற்பாடு செய்யப்படும். இப்பொழுது தரைப்படையுடனும், கடற்படையுடனும் ஒத்துழைப்பதுபோல, சமாதான காலத்திலும் இவ்விரண்டு இலாகாக்களுடன் விமானப்படை ஒத்துழைக்கும். இந்த மூன்று இலாகாக்களும் சேர்ந்து தற்காப்பு, போக்குவரத்து முறைகளைச் சரிவர நடத்தி வருவதிலிருந்து அடையவேண்டிய லக்ஷியங்கள் யாவை, நிவர்த்திக்கவேண்டிய இடையூறுகள் யாவை என்பதை இந்த ஒத்துழைப்பு சூசிப்பிக்கின்றது. கடல் மார்க்கங்களிலும் தரை போக்குவரத்துகளிலும் ஏற்பட்ட முறைகளையும் அனுஷ்டானங்களையும் அடிப்

படையாகக்கொண்டு விமானப் போக்குவரவுகளை நிர்த்தாரணம் செய்யக்கூடாது. இவைகளின் அனுபோகத்தை ஒட்டி புதிய விமானப் போக்குவரத்து மார்க்கங்கள் நிறுவப்பட வேண்டும். இந்த அபிப்பிராயத்தைக்கொண்டும் விமானப் போக்குவரத்து ஏற்பாடு தனிப்பட்ட முறையில் நடை பெறமுடியாது. இவ்விதமான பல காரணங்களால்தான்; தேசிய முறையிலும், சர்வதேச முறையிலும் விமானப்படை போக்குவரத்து ஏற்பாடுகள் இப்பொழுதே நடை பெறவேண்டுமென்று நான் சொல்லுகிறேன்.

யுத்தம் பரவியதிலிருந்து முன்னிருந்தவர்களின் ஆலோசனைகள் எவ்வளவு குறுகலானதென்றும், செட்டுள்ளதென்றும் வெளியாகி விட்டது. அநேக காரியங்கள் நடைபெற்றன. மார்க்கங்களில் அநேகர் இறந்து தியாகம் செய்திருக்கிறார்கள். நாம் நன்றாய் பரிசீலனை செய்தால் சாம்ராஜ்ய நாடுகளுக்குப் போகும் விமானப் போக்குவரவு வசதிகள் எவ்வளவு சொல்பமென்றும் அறு குறையானதென்றும் தெரியவரும். புத்தி விலாசமும் ஊக்கமும் மிகுந்திருந்தால் அப்பொழுது சாம்ராஜ்ய நாடுகளின் தற்காப்பும் கோடிக்கணக்கான எல்லைப்புற நிலயங்கள், நாடுகளின் ரக்ஷணையையும் சுலபமாகவும் பலமாகவும் செய்திருக்கலாம். விமானப்படை பலத்தின் மூலமாக சமாதான காலத்திலும் அமைதி நன்றாக நடைபெற்றுவரும். சமுத்திர மார்க்கங்களிலும், கண்டங்களின் பேரிலும் இருந்த விமான மார்க்கங்கள் மூலமாக தனிப்பட்ட நபர்கள்தான் விமானங்கள் மூலம் சென்றார்கள். யுத்த அவசியத்தை முன்னிட்டுத்தான் விமான நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. ஆகையால் சந்தர்ப்பத்தைக் கைவிட்ட தவறுதல் இப்பொழுதுதான் அதிக நஷ்டத்தின் பேரிலும் தாமதத்தின் பேரிலும் நமக்குப் புலப்பட்டிருக்கிறது. தேசிய முறையிலும் சர்வ தேசங்களுக்காகவும் விமானப் போக்குவரவு ஏற்பாட்டை மகத்தான வகையில் ஏற்பாடு செய்யவேண்டிய சந்தர்ப்பம் இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை ஊக்கத்துடனும், புத்திசாலித்தனத்துடனும் உபயோகித்து நாம் பலன் பெறவேண்டும்.

---

## வெண்டல் வில்கி.

---

நேசநாட்டார்களிடையே ராஜீய முறைகளில் தீவிரமான நடவடிக்கைகள் நடத்த வெண்டல் வில்கிக்கு விசேஷமான செல்வாக்கு இருக்கிறதென்று தோன்றுகிறது. மற்றவர்கள் ஸமஸ்தான விஷயங்களில் ஈடுபட்டிருக்கும்பொழுது, பொதுஜனங்களிடையே இருந்துவரும் தப்பான அபிப்பிராயங்களை ஆதாரமாகக் கொண்டு வியவகாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். தப்பான அபிப்பிராயங்களை மாற்றுவது கடினம். வில்கி போன்ற ஒரு முக்கியமானவர் தப்பான அபிப்பிராயங்களை ஏற்றுக்கொள்ளுவாரென்று அமெரிக்கர்களும், பிரிடிஷார்களும் சுலபமாக நம்பிவிட மாட்டார்கள். சாம்ராஜ்யம், இந்தியா, இரண்டாம் போர்முனை அட்லாண்டிக் சாசனம், இவை எல்லாவற்றையும் பற்றிய தற்போதய சரித்திர பூர்வமான தகவல்களைக் கபடமாகத்தான் அவர் அறிந்திருக்கிறார். சென்ற வாரத்தில் இதற்குத் தகுந்த ருஜுக்கிடைத்திருக்கிறது. அவருக்குப் புலப்படும் உலகத்தின் பொருளாதார, ராஜீய வியவகாரங்களில் அமெரிக்காவும் அவருடைய கக்ஷிக்காரர்களும் தலையிடுவதற்கு முன், உள்நாட்டை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று அவர் அறிகிறாராம். நம்மைப் பார்த்து மிஸ்ட்டர் வில்கி வியப்புறுவது போல் நாமும் அவரைக் கண்டு வியப்புறுகிறோம். சில சமயங்களில் ஜனநாயக முறையில் தாராளக்கக்ஷியைச் சேர்ந்தவராகத் தோன்றுகிறார். மற்ற ஒரு சமயத்தில் வியாபாரிபோல், பழைய சுயேச்சை வியாபாரம் என்ற முறையில் தொழிலபிவிருத்தியாகி செல்வப்பெருக்கு உண்டாகவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார். மிஸ்ட்டர் வில்கியின் பேச்சில் கபடமில்லையென்பது மெச்சத்தக்கது. ஆகிலும் அவருக்கு பேச்சுவன்மையானது அவருக்கு விவாதங்களில் ஏற்பட்ட பழக்கத்தைப் பொறுத்து உண்டாகியிருக்கிறது. ஆகையால் தான் அவருடைய பேச்சில் அபிப்பிராய பேதங்களிருந்தபோதிலும் அவைகள் உண்மைபோல் காணப்படுகின்றன. பிரிடிஷாரின் யுத்த நோக்கங்களை தெளிவுரச் சொல்லிவிடவேண்டுமென்று அவர் வற்புறுத்தும் போதும் நம்முடைய அபிப்பிராயத்தை அவசியம் வெளியிடத்தான் வேண்டுமென்று கட்டாயப்படுத்தினல் தான் அவருடைய பேச்சு உபயோகப்படும். இரண்டு நாடுகளுக்குமுள்ள நட்பு சம்பந்தமாக இத்தருணத்தில், அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடிய ஒருவர் ஆதாரத்துடனும், நல்லறிவுடனும், பொறுப்புடனும் பேச வேண்டுமென்பது மெத்த அவச்யம். ஜனாதிபதி பதவிக்காகச் செய்யப்படும் பிரசாரங்கள் மாஸ்கோவிலும், கெயிரோவிலும், சுங்கிங்கிலும் நடைபெறக்கூடாது. தனித்திருக்க வேண்டுமென்று

உள்நாட்டில் பிரசாரம் செய்ய வேண்டுமே ஒழிய இந்தியாவைப்பற்றிப் பேசுவதில் புண்ணியமில்லை. குடியரசுக் கக்ஷியாரை சர்வதேச இயக்கத்தில் ஈடுபடும்படி செய்ய முயற்சி செய்து வரும் ஒவ்வொரு மனிதனும், பிரிடனுக்கும், ஐரோப்பாவுக்கும், உலகத்துக்கும், நண்பன் என்பது நிச்சயம்.

# ஜப்பானிய தளங்களை இடைவிடாது தாக்குதல்.

## பிரிடிஷ் விமானப்படையின் ஏப்ரல் மாதத்திய நிகழ்ச்சிகள்.

### பர்மாவில் எதிரிக்கு ஓய்வு கிடையாது.

பர்மாவிலும், இந்தியாவிலும் ஏப்ரல் மாதத்தில் பிரிடிஷ் வெடிவிமானங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி அரசாங்கத்தார் ஒரு பிரசுரம் செய்திருக்கிறார்கள். அதில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

சென்ற மாதம் முதல் தேதியன்று பிரிடிஷ் விமானப்படையின் 25-வது வருஷாந்திர விழா நடைபெற்றது. அன்று தின ஞாபகார்த்தமாக இந்தியாவிலுள்ள விமானப்படையைச் சேர்ந்த 11 ஹரிகேன் விமானங்கள் தென்கிழக்கு வங்காளத்தில் சண்டை விமானங்கள் உதவி கொண்டு பெனி கிராமங்களைத் தாக்கிய 30 ஜப்பானிய வெடி விமானங்களை எதிர்த்தன.

நமது சண்டை விமானங்கள் எதிரியின் 5 வெடி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. 3 வெடி விமானங்கள் நாசமாயிருக்கலாம். பின்னும் அநேக எதிரி விமானங்களைப் பழுது செய்திருக்கலாம். நமக்கு ஒரு விமான நஷ்டமேற்பட்டது. விமானி குதித்து விட்டான். பர்மாவிலுள்ள எதிரியை ஒவ்வொரு நாளும் பிரிடிஷ் வெடி விமானங்கள் தாக்கிய மாதத்தின் முதல் நாளிலேயே மேற்சொன்ன நிகழ்ச்சிகள் சம்பவித்தது புகழத்தக்கது.

ஏப்ரல் மாத ஆரம்பத்திலேயே ஜப்பான் ஆக்கிரமித்த பர்மா பேரில் இவ்வருஷத்தில் பிரிடிஷ் விமானப்படை பொழிந்த குண்டுகளின் பரிமாணம் 1,000 டன்கள் எடைமானத்துக்கு மேல் அதிகரித்து விட்டது. இடைவிடாது விமான தளங்களும், அரக்கானிலுள்ள போக்கு வரவு மார்க்கங்களும் எதிரியின் கேந்திர ஸ்தானங்களும் தான் தாக்கப்பட்டன.

இம்மாதத்திய நிகழ்ச்சிகளில் ஜப்பானியத் துருப்புகளில் அநேகர் உயிர் துறந்தார்கள். ஏப்ரல் 14-ம் தேதி வெற்றிகரமான ஒரு விமானத்தாக்குதல் செய்யப்பட்டது. அக்யாப்புக்குத் தெற்கே ராம்ரித்தீவுக்குச் சமீபத்தில் ஜப்பானியத் துருப்புகளை ஏற்றிவந்த ஆறு படகுகளை பிரிடிஷ் சண்டை விமானங்கள் கண்ணுற்றன. எல்லாப்படகுகளும் மூழ்கி விட்டன. தண்ணீரில் மிதந்த சவங்களைப் பார்த்தால் நஷ்ட சதவிகிதம் அதிகமாகயிருந்திருக்க வேண்டும்.

### எதிரிக்கு ஆள் சேதம்.

விமானத்தாக்குதல்களிலிருந்து எதிரிக்கு நேர்ந்த ஆள் சேதத்தைப் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடுவது அசாத்யமான காரியம். ஆகிலும் ஏப்ரல் மாதத்தில் நூற்றுக் கணக்கான ஜப்பானியர்கள் இறந்திருப்பார்களென்றே சொல்லலாம்.

அரக்கானிலுள்ள எதிரியைத் தாக்குவதில் தரைப்படைகளோடு பிரிடிஷ் விமானப் படையும் உதவியாக வேலை செய்து வருவதுடன், பர்மாவிலுள்ள மற்ற இடங்களையும் விமானப் படை அலக்ஷியம் செய்து விடவில்லை. விமான தளங்களை இரவு பகலாக நமது விமானங்கள் தாக்கி வருகின்றன. ஷ்வீபோ, மெயிக்டிலா, டாங்கூ முதலிய தளங்கள் முக்கியமானவைகள். ரெயில்வே ஸ்டேஷன்களும், இருப்புப்பாதைகளும், தொழிற் ஸ்தாபனங்களும் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டன. இந்த மாதம் பூராவிலும் விமானங்கள் கீழாகப் பறந்து, மோட்டார் போக்குவரவுகளையும், சாமான் வண்டிகளையும், நதியிலுள்ள சாமான் படகுகள், பெரிய ஸ்டீமர்களையும் தாக்கியிருக்கின்றன.

இந்த நடவடிக்கைகளில், ஏப்ரல் மாதம் 11-ம் தேதியன்று இந்தியாவுக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்ட போபைடர் விமானங்கள் பெரும் பங்கெடுத்துக் கொண்டன. இந்த விமானத்தில் மிகவும் பலமான கவசங்களிருக்கின்றன. இதில் பலமான பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த விமானம் ஜப்பானிய ஸப்ளைப் படகுகளையும், லாரிகளையும் தொழிற்சாலை கட்டடங்களையும், ரெயில்வே இஞ்ஜின்களையும் வெற்றிகரமாகத் தாக்குதல் செய்து பழுதுபடுத்திவிடுகிறது, அல்லது நாசமாக்கி விடுகிறது.

சென்ற மாதத்தில் இரவில் 15 தடவை விமான நடவடிக்கை செய்யப்பட்டது. எல்லாத் தாக்குதல்களிலும் விமான தளங்கள் தான் லக்ஷியம். டென்னஸரிம்-சியாம் தீபகற்பத்திலுள்ள டாவாய்க்கும் இரண்டு தடவை வெடி விமானங்கள் வெகு தூரம் பறந்து சென்று வெடிகுண்டுகளை வீசின. மற்ற நடவடிக்கைகளில் முக்கியமாக ரெங்கூனிலுள்ள இன்ஜின்கள் வைக்கப்பட்டிருக்கும் தளம் தாக்குண்டது. அநேக பெரிய வெடிகுண்டுகள் போடப்பட்டு ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டது.

### ஜப்பானியர்களின் விமான நடவடிக்கை.

எதிரியின் விமான நடவடிக்கை பிரிடிஷ் விமானப்படையைப் போல அவ்வளவு வலுவாகயில்லை. தென்கிழக்கு வங்காளத்தில் சில தாக்குதல்களும், இம்பாலில் இரண்டு தடவை நடவடிக்கையும் ஏற்பட்டன. ஜனவரி மாதத்திற்குப் பிறகு இராக்காலங்களில் எதிரி நடமாட்டமே கிடையாது.

ஏப்ரல் மாதத்தில் நமது விமானங்களில் 11 சுட்டு வீழ்த்தப்பட்டது. இவைகளில் 10 நாம் முன்னேறித் தாக்கிய நடவடிக்கைகளில் ஏற்பட்ட நஷ்டம். நமது விமானிகள் 6 ஜப்பானிய விமானங்களை நாசம் செய்து விட்டார்கள். 8 விமானங்களை நாசமாக்கியிருக்கலாம். பின்னும் 25 விமானங்களைப் பழுது செய்திருக்கலாம். இவை வினு விமான எதிர்ப்பு பீரங்கிகளின் மூலம் 3 விமானஙகள் சுட்டு வீழ்த்தப்பட்டும், இன்னும் அநேகம் பழுது பட்டுமிருக்கின்றன.

---

## பர்மாவைப்பற்றி நேர்முகமாகக் கண்டவரின் அபிப்பிராயம்.

கிழ்திசையில் பாஸிஸ்டு கக்ஷிக்காரர்கள் செய்துவரும் நடவடிக்கைகளைப்பற்றி நல்ல எண்ணத்துடன் ஒருவர் கட்டுரை எழுவது என்பது துர்லபம். அலகபாத்தில் கிடாபிஸ்தான் அச்சாலையில் பிரசுரித்த "பர்மாவின் நிகழ்ச்சிகள்" என்று தலையங்கமிட்ட புஸ்தகத்தில் M. தெயின்பே என்பவர் தன்னுடைய அபிப்பிராயங்களையும், அனுபவங்களையும் வெளியிட்டிருக்கிறார். பர்மாவில் ஏற்கனவே நிர்வாகம் செய்த அரசாங்கத்தின் பேரில் அவருக்குக் கொஞ்சம்கூட த்வேஷ புத்தி கிடையாது. ரகசிய இயக்கமான தேசீயப்புரட்சி கக்ஷியைச் சேர்ந்த வட பர்மாப் பகுதியிலுள்ளவர்களின் தலைவராக அவர் இருந்தார். புரட்சிக் கக்ஷியார்கள் ஜப்பானியர்களுடன் சிறிது காலம் ஒத்துழைத்தார்கள். பிறகு ஜப்பானிய ஆக்ஷியின் அனுபவத்தின் பேரில் அதைப்பற்றி சில அபிப்பிராயங்களை அவர் வெளியிட்டார். அதன் பயனாக சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டார். இந்த சமயத்தில்தான் அவர் பர்மா பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்து ஆசியா கண்டத்தின் கொடுங்கோல் பூதத்தின் நிலைமையையும், நடவடிக்கைகளையும் கவனித்து வந்தார். அதன் பிறகு இந்தியாவுக்குத் தப்பி ஓடி வந்தார். பிறகு புஸ்தகம் எழுதியிருக்கிறார்.

### ஸ்வதந்திரம் என்ற பொய்ப் பேச்சு.

பிரிடனுக்கும் அதன் நேசதேசத்தார்களுக்கும் நெருக்கடியான சமயத்தில் பர்மாவின் ஸ்வதந்திரம் நிறைவேறிவிடுமென்று எதிர்பார்த்த ராஜீயக்கொள்கையுள்ளவர்களில் இப் புஸ்தகம் எழுதினவரும் ஒருவர். ஆகிலும் பிசாசுடன் சகவாசம் செய்தவர்கள், பிசாசின் கொடுமைகளையும் அனுபவிக்கவேண்டுமென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். பர்மாவுக்கு ஸ்வதந்திரம் அளிப்பதாக ஜப்பானியர்கள் சொன்ன வாக்குறுதிகளெல்லாம் பொய் என்று அவர் கண்டுகொண்ட பிறகுதான் அவருக்கு புத்தித்தெளிவு உண்டாகிற்று. பர்மாவிலுள்ள ஜப்பானிய தளகர்த்தரான ஜெனரல் இட்டா என்பவர் "யுத்த காலத்தில் பர்மாவுக்கு ஸ்வந்திரம் அளிப்பதென்பது சாத்யமான காரியம் இல்லை, சாவதானம் இல்லை. ஜப்பானியர்கள் வெற்றி பெற்றால்தான் உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டார். பர்மாவில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்ட பொழுது டோக்கியோ ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டது.

"புதிய அரசாங்கம் ஜப்பானியரின் ராணுவ நிர்வாகத்துடன் ஒத்துழைக்கவேண்டும். தளகர்த்தர் மேலான அதிகாரம் வகிப்பார். அரசாங்க வரவு செலவு திட்டக்கணக்கையும் மற்ற முக்கியமான வியவகாரங்களையும் ஜப்பானிய ராணுவ நிர்வாகம் பரிசீலனை செய்து வரும். ஜப்பானிய அரசாங்கத்தார் பூராவாக யுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜப்பானியர்கள் நடத்திவரும் யுத்தத்தை பர்மியர்கள் தங்கள் யுத்தம் போல பாவிக்க வேண்டும்."

## ஜப்பானியச் சிப்பாய்.

ஜப்பானியச் சிப்பாய் பெரிய கொள்ளைக்காரன். அவனுடைய அட்டூழியங்கள் அநேகம் இருக்கின்றன. தினசரி கொள்ளையடிப்பதும், பிறர்களை பயமுறுத்துவதும் தவிர அதிகமான கொடுமைகளையும் அவன் செய்து வருகிறான். இதற்கு ஏராளமான சாக்ஷியம் இருக்கிறது உதாரணமாக.

"ஒரு சமையல் அறைக்குள் சொந்தக்காரர்கள் அனுமதியில்லாமலே ஜப்பானியத் துருப்புகள் நுழைந்து அங்கிருக்கும் உப்பு, மீன், மற்ற இதர சாமான்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொள்ளுவார்கள். கடைகளில் நுழைந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பணமும் கொடுக்கிறதில்லை. சில சமயங்களில் கடைகளையும் சூறையிடுவார்கள். ஜப்பானியர்கள் பேரம் செய்யும் முறைகள் இவைதான். "சவங்களைக்கழுகுகள் கொத்துவது போல் ஜப்பானியர்களும் உயிர் பிராணிகளைக் கொள்ளையிடுகிறார்கள். அவர்களுக்கு தங்கத்தின் பேரிலும், பணத்தின் பேரிலும், ஆசை அதிகம். கடியாரங்களையும், தட்டுகளையும், வெள்ளி சாமான்களையும், ஜோடுகளையும் திருடிக்கொண்டு போய் விடுவார்கள். குடியானவர்கள் தங்கள் ஆஸ்திகளை வைக்கோல் போருக்கடியில் புதைத்து வைப்பது வழக்கம். இது ஜப்பானியர்களுக்குத் தெரியும். அதையும் அவர்கள் எடுத்துக் கொண்டு விடுவார்கள். எருதுகளையும் ஓட்டிக்கொண்டு போய் விடுவார்கள்.

"ஜப்பானியர்களின் கொடுமைகளின் மூலம் நமது பௌத்த சந்நியாசிகள்தான் ரொம்பவும் கஷ்டமடைகிறார்கள். கியாக்ஸியிலுள்ள மின்ங்கியா யூங்கிலுள்ள சந்நியாசிகள் ஜப்பானியர்களின் உடைகளைச் சுத்தி செய்யவும் ஜல ஸப்ளை செய்யவும் கட்டாயப்படுத்தப் பட்டார்கள்.

"ஒவ்வொரு ஜப்பானியரிடமும் ஒரு சிறிய புஸ்தகமிருக்கிறது. அதன் மூலம் அவர்கள பர்மிய பாஷையில் சிலவற்றை அறிந்திருக்கிறார்கள். அதில் முதல் வாக்கியத்தில் "ஜப்பானியர்கள் பர்மாவின் ஸ்வந்திரத்துக்காக யுத்தம் செய்கிறார்களென்றும்" இரண்டாவதில் "இந்த இடத்தில் எங்கேயாவது அழகான மாதுகள் இருக்கிறார்களா என்றும் எழுதப் பட்டிருக்கிறது."

நமது கிரந்த கர்த்தா தன்னுடைய புஸ்தகத்தில் ஷிண்டோயிஸம் என்னும் ஜப்பானிய மதக்கொள்கையை ஜப்பானியர்கள் சாமர்த்தியமாக பர்மாவில் பரவச் செய்கிறார்களென்றும், அதன் மூலம் பர்மியர்களிடம் அருவருப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும் எழுதியிருக்கிறார். "ஜப்பானிய ஆலோசகர்களும் மினுமியும் ஜப்பானுடைய இழிவான சாரர்கள். மினுமி பௌத்த மதத்தை மாற்றி பர்மாவில் ஜப்பானியர்களின் ஆதிக்கம் ஓங்குவதற்காக முயற்சி செய்து வருகிறான். எல்லாப் பிரசார முறைகளும் யதேச்சாதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகச் செய்யப்படுகின்றன.

## பொருளாதார நிலைமை,

பொருளாதார முறையில் எங்கு பார்த்தாலும் குழப்பம் ஏற்பட்டு நிலைமை மோசமாகி வருகிறது. காகிதப் பணம்தான் செலவாணியிலிருக்கிறது. தாராளமாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்துகள் சீர்கெட்டு விட்டன. எல்லா நாடுகளிலிருந்தும் இறக்குமதி நின்றுவிட்டது.

எண்ணெய்ப் பிரதேசங்களுக்கு பிரிடிஷார்கள் பரிஷ்காரமாகத் தீ வைத்துக் கொளுத்திவிட்டதிலிருந்து ஜப்பானியர்களுக்கு சங்கடம் ஏற்பட்டுவிட்டது. தெயின்பே எழுதுகிறார். "எண்ணெய்ப் பிரதேசங்களில் அறுகுறையான ஆடைகளுடன் ஜப்பானியர்கள் இடிந்துபோன குப்பைகளை அப்புறப்படுத்திவருகிறார்கள். மூக்குக் கண்ணாடிபூண்ட ஜப்பானிய இஞ்ஜினியர்கள் படையின் உத்தியோகஸ்தர் எந்தப் பிரதேசத்தில் சீர் திருத்தும் வேலையை முதலில் ஆரப்பிப்பதென்று புலப்படாமல் திகைத்து நிற்கிறார். இந்தப் பிரதேசத்திலிருக்கும் எறிந்துபோன சாமான் தூக்கும் யந்திரங்களைப் பார்த்து அவர்கள் ஏமாற்றம் அடைகிறார்கள்.

"சில ஜில்லாக்களில் விவசாயம் சீர்கெட்டுவிட்டது. வாய்க்கால்கள் சீர்கேடடைந்து விட்டன. முட்டாள்தனமாக சில காரியங்களை ஜப்பானியத் துருப்புகள் செய்து வருகின்றன. இவைகள் மூலம் விவசாய முறைகள் தடைபெற்று விட்டன.

"இறக்குமதி செய்யப்பட்ட சாமான்கள் குறைந்து விட்டன. இது வரையில் பர்மாவில் உற்பத்தியான சாமான்களை ஜப்பான் அப்புறப்படுத்தி வந்தது. ஸெயவாடி கிராண்டிலிருந்து ஜப்பானுக்கு 30,000 மூட்டைகள் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டன.

— தினசரி உபயோகத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களின் விலை மிகவும் அதிகரித்து விட்டது. ஸோப்புக்கட்டி ஒன்று ஒரு ரூபாயாகவும், ஒரு ஊசி இரண்டு ரூபாயாகவும், நெருப்புப்பெட்டி $4\frac{1}{2}$ அணாவாகவும் விற்கிறது. சில இடங்களில் அரிசி சேமிப்புகளில் கிருமிகள் உண்டாகி விட்டன. சில இடங்களில் பட்டினி கிடக்கிறார்கள். இவைகளுக்குக் காரணம் போதுமான போக்கு வரவு இல்லாதது தான். இந்த விருத்தாந்தம் ஆறு மாதங்களுக்கு முன் எழுதப்பட்டது.

### கிரந்தகர்த்தாவின் முடிவுரை.

நிலைமையானது இவ்விதமாக கோரமாகவும் சங்கடமாகவுமிருந்தபோதிலும் இந்தக் கஷ்டங்களை அனுபவித்ததிலிருந்து பர்மியர்களுக்கு ராஜீய முறையில் ஒரு படிப்பினை ஏற்பட்டிருக்கிறது. "பர்மாவிலுள்ள முன்னேற்ற கக்ஷிக்காரர்கள் உலக க்ஷேமத்திற்காகப் பாடுபடும் தேசங்களுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். மனித வர்க்கத்தின் முற்போக்கு ஸர்வ நிச்சயமென்று அவர்கள் அறிகிறார்கள்."

வெகுகாலம் கழித்து ஸித்தியடையப்போகும் ஜப்பானியரின் வாக்குறுதிகளைக்கண்டு பர்மியர்கள் மனம் துன்புற்றிருக்கிறது. ஒன்று நிச்சயமென்று அவர்களறிகிறார்கள். ஜப்பானியர்களுடன் ஒப்பந்தம் ஒன்றும் நடைபெறாது என்பது நிச்சயம். ஜனங்களுக்கு அவர் ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

"ஜப்பானியரைப் பற்றியாவது, ஜெர்மானியரைப்பற்றியாவது எந்த இந்தியரும் ஏதாவது சிறிது நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தால் அதை உடன் காலத்திலேயே அகற்றிவிடுங்கள். நேசநாடுகள் வெற்றி பெற்றால்தான் இந்தியாவில் பாஸிஸ்டு கொள்கைகளின் ஆதிக்கமில்லாமல் ஸ்வதந்திர இந்தியா ஸ்தாபிதமாகும்.

"ஆகிலும், ஜப்பானியர்கள் ஒரு விசித்ரமானவர்களென்று கருதி ஜாக்கிரதையாகயிருங்கள். இதுவரையில் ஜப்பானுடைய அட்டூழியங்கள் இந்தியாவில் நடைபெறவில்லை. வருங்காலத்தில் இந்தியா தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி பெற்றிருப்பது நேசக் கக்ஷியில் சேர்ந்திருப்பதினால்தான்." அவர் பின்னும் சொல்லுவதாவது:

"ஜெர்மானியர்களும், ஜப்பானியர்களும் கையாண்டுவரும் ஐச்வர்யக் கொள்ளையடிப்பது என்ற புதிய உலக அமைப்பின்படி இந்தியாவிலுள்ள விவசாயிக்கும், தொழிலாளருக்கும் அவனுடைய தானியத்திற்கும், பிரயாசைக்கும் இப்பொழுது கிடைப்பதைவிட அதிகமான விலையும் அதிகமான ஊதியமும் கிடைத்துவிடுமென்று நம்பவேண்டாம். எதிரிகளின் திட்டப்படி பொது ஜனங்களெல்லாம் ஜீவன முறையில் சீர்கேடு அடைய வேண்டியதுதான்.

அவர் கடைசியாக இந்தியாவுக்கு விடுத்த செய்தியாதெனில் :—

"பாஸிஸத்தை ஒழிக்க ஒவ்வொருவரும் தன்னந்தனியாகச் செய்து வரும் பிரயத்தன மூலமாக நமது வலிமை அதிகரித்து வருகிறது. இந்த வலிமையே இந்தியாவுக்கு ஸ்வதந்திரத்தை சம்பாதித்து விடும். பர்மாவின் படிப்பினை இதுதான். அது ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கிறது. "பர்மாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்" என்ற புஸ்தகத்தை இந்தியர்கள் படித்து சரியான முறையில் நடந்து கொள்ளுவார்களென்று நம்புகிறேன்."

---

## ஜெர்மானியர்களுக்கு, யுத்தத்தில் வெற்றி பெறும் மார்க்கத்தைத் தவிர மற்ற எல்லா விஷயங்களும் தெரியும்.

(சென்னை யுத்த விமர்சனம்).

ஜெர்மன் தேசத்து அரசியல் நிலையின் அபிவிருத்தியில் ஒவ்வொரு பருவத்தையும் நன்கு கவனித்து வருபவர்களில் பிரிடிஷ் பிரதம மந்திரியும் ஒருவர். அவர் தனது 'நினைவுகளும் தீரச் செயல்களும்' என்ற புஸ்தகத்தில் இந்த அபிவிருத்தி ஆரம்பித்தபொழுது எவ்வாறு ஜெர்மனியிருந்தது என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆனால் அபிவிருத்தி என்பது இந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வார்த்தையல்ல என்று ஹாரோல்டு ஹாப்ஸன் 'லண்டன் அறிவிப்பு' என்ற புஸ்தகத்தில் எழுதுகிறார். அபிவிருத்தி

என்றால் வளர்ச்சியும் மாறுதலும் இருக்கவேண்டும். ஆனால் ஜெர்மன் தேசத்து விஷயத்தில் மாறுதல் இருப்பதாகத் தெரியவில்லை. மன்னராட்சி நாடானது குடியரசாக ஆகியிருக்கிறது. கெய்ஸருக்கு பதிலாக ஒரு ஹிட்லர் இருக்கிறார். ஆனால் இருவர்களிடமும் அகந்தையும், மற்ற ஜனங்களின் உரிமைகளில் வெறுப்பும் தங்கள் சத்துருக்களிடம் இகழ்ச்சியும், அளவற்ற அதிகார ஆசையும், அழிவும், அபாயமும் விளைவிப்பதற்கு மூர்க்கத்தனமும் குடிகொண்டிருக்கின்றன.

மிஸ்டர் சர்ச்சில் தனது புஸ்தகத்தில் 1906-ம் வருஷத்திய ஒரு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்த வருஷத்தில் அவர் குடியேற்ற நாட்டு உதவி மந்திரியாயிருந்தார். ஸைலேஷியாவில் நடந்த ஜெர்மன் ராணுவ வருஷாந்திர ஒத்திகையை வந்துபார்க்க சர்ச்சிலுக்கு ஒரு அழைப்புக் கடிதம் ஜெர்மன் சக்ரவர்த்தி அனுப்பியிருந்தார். இதே மாதிரி சிறிது காலத்துக்கு முன்பு ந்யூரெம்பரக்கில் நாஸிக் கட்சி மெம்பர்களின் வெறிகொண்ட பிரசங்கங்களையும் வருஷாந்திர விளையாட்டுகளையும் கொண்டாட்டங்களையும் கொடியேற்றங்களையும், முரசுகளையும் பார்ப்பதற்காக ஜனநாயக வல்லரசுகளின் பிரதிநிதிகளும் அழைக்கப் படுவதுண்டு. இது மாதிரி வேலைகளில் (அவர்கள் அடிக்கடி இவைகளை நடத்திவந்தார்கள்). அவர்கள் திறமையாகவும் நடத்திக்காட்டினார்கள். ஒவ்வொரு இரவிலும் ஒரு பகட்டான விருந்து நடைபெற்றது. நடு இரவில் விருந்தினர்கள் படுத்துக்கொள்ளுவார்கள். மறுபடியும் விடியற்காலையில் 3 அல்லது 4 மணிக்கு எழுந்திருந்து ஒத்திகை ஸ்தலத்திற்குச் சென்று காலை முதல் 10 அல்லது 12 மணி நேரத்திற்கு ஜெர்மன் ராணுவ ஒத்திகைகளைக் கவனிப்பார்கள். விருந்து, பிறகு சிலமணி நேரத்திற்கு காட்சிகளைக் கவனிப்பது, தூக்கம், பிறகு விருந்து இவ்வாறாக மாறி மாறி நடந்துவந்தது. இம்மாதிரி செய்வதின் காரணம் விருந்தினர்களைக் களைப்படையும் படி செய்து அவர்களுக்கு அந்த காட்சியைக் கவனிப்பதைத் தவிர வேறு விஷயங்களில் அதிகச் சிரத்தையில்லாமல் செய்வதே.

### அபாரமான திடுக்கிடத்தக்க காட்சிகள்.

**எப்படிப்பட்ட காட்சி!** கெய்ஸர் ராணுவத்தை பார்வையிடும் பொழுது, 50,000 குதிரைப் படை, காலாட் படை, பீரங்கிப் படை வரிசை வரிசையாக அணிவகுத்து கெய்ஸரின் முன்னும் மற்ற அரசவர்க்கங்களின் முன்னும் சென்றன.

காலாட்படை, பட்டாளம் பட்டாளமாக வரிசையாகச் சென்றது. ஒரு பெரிய பூதமான உருவை செல்வது போலிருந்தது. குதிரைப்படை வரிசைகள், யுத்த பீரங்கிகள், மோட்டார் வண்டிகள் எல்லாம் சென்றன. இந்தப் பெரிய படைவரிசை செல்ல 5 மணி நேரம் ஆயிற்று. ஆனால் இது ராணுவ முஸ்தீப்புக்கு முன்னாலிருந்த படையில் இருபதிலொரு பங்குதான். இதே ராணுவ நடத்து தொகை ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு மாகாணத்திலும் சேர்ந்தார்போல் காண்பிக்கப்படலாம்.

இந்த ராணுவ ஒத்திகையைப் பார்த்து விட்டுதான் சர்ச்சில் மிகவும் கவலையுடன் ஆலோசிக்கலானார். அவர் சொல்லுகிறார். "நம் பிரிடிஷ் சேனையில் காலாட்படையில் ஒரு சிறிய பகுதியும், குதிரைப்படையில் ஒரு பகுதியும், அல்டர்ஷாட் என்னும் நகரில் பார்வையிடப் பட்டால் அது வெகு பிரமாதமாகச் சொல்லப்படுகிறது. எனக்குப் பக்கத்தில் தன்னுடைய குதிரையின் மேல் உட்கார்ந்து கொண்டு தீர்க்காலோசனை செய்துகொண்டிருந்த பிரெஞ்சு தேசத்து ராணுவ தூதரின் கவலைப்படுகிற முகத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தேன். எங்கு பார்த்தாலும் முடிவில்லாத தகுந்த சிப்பாய்களும், பயங்கரமான போராயுதங்களும் இருக்கும் உணர்ச்சியே குடிகொண்டிருந்தது. இந்தக் காட்சி மிகவும் பயங்கரமானதாகவும், மிகவும் மயக்கக் கூடியதாகவுமிருந்தது."

இப்பொழுது ஜெர்மானியர்களைப் பற்றி ஒரு விசித்திரமான விஷயம் தெரிய வருகிறது. அவர்களுக்குச் சண்டையிலேயே மிகவும் பிரியம். அதற்காக எப்பொழுதும் தயார் செய்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களுடைய புத்தி திறமையை அதற்காகவே செலவழிக்கிறார்கள். தகுந்த ஆட்களும் ஆயுதங்களும் வேண்டுமென்பதற்காக எல்லா தியாகங்களையும் செய்யத்தயாராயிருக்கிறார்கள். தங்களுடைய சத்துருக்களையும், அவர்களைத் தாக்கும் காலத்தையும் தாங்களே நிர்ணயிக்கிறார்கள். சரியான காலத்தில் அதிகமான பலத்துடன் சண்டை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கடைசியில் தோற்றுப்போகிறார்கள். 1918-ல் தோற்றுப் போனார்கள். இப்பொழுதும் தோற்றுக்கொண்டு வருகிறார்கள். ஜெர்மானியர்களுக்கு யுத்தத்தை ஜயிக்கும் வழியைத் தவிர மற்றவையெல்லாம் தெரியும்.

இது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. காரணம் என்ன? மிஸ்ட்டர் சர்ச்சில் இதை வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனால் அடிக்கடி ஜெர்மானியப் பிரச்னையைப் பற்றி அவர் புஸ்தகத்தில் எழுதியிருப்பதில் ஏன் ஜெர்மானியர்கள் யுத்தத்தில் தோல்வியடைகிறார்கள் என்பதும் தெரியவருகிறது.

**சென்ற யுத்தத்தில் ஸப்மரீன் போராட்டம்.**

சென்ற யுத்தத்தில் நடந்த ஸப்மரீன் போராட்டத்திற்கும் தற்போது நடக்கும் போராட்டத்திற்கும் நெருங்கிய இணை இருக்கிறது. 1916-ம் வருஷத்தில் பிரிடிஷ் கப்பற் படைக்கும் ஸப்மரீனுக்கும் போராட்டாம் வெகு உக்ரமாக ஆரம்பித்தது. "இதுவரையிலும் மனிதர்களாலே நினைக்க முடியாத ஒரு போராட்டமாகவும் மிகவும் இறக்கமில்லாததாகவும் உக்ரமானதுமாக இருந்தது. நமக்குத் தெரிந்த எல்லா சாஸ்திரங்களின் (யந்திர சாஸ்திரம், திருஷ்டி சாஸ்திரம், நாத சாஸ்திரம்) உதவியும் உபயோகப்படுத்தப்பட்டது. அந்த யுத்தத்தில் படங்களும், கணக்குகளும், கருவிகளும், கெட்டிக்காரர்களும், தைரியசாலிகளும் ஆழ்ந்த யோசனையும் திடீரென்று வெடித்தலும் சாவுகளும் சமுத்திர மத்தியில் கப்பல் வேலைக்காரர்கள் வேட்டையாடப்பட்டுத்தள்ளப்படுவதும் பெரிய கப்பல்கள் உதவியும் இறக்கமுமில்லாமல் துறைமுகத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் உடைந்து முழுகுவதுமாக இருந்தது. இந்த மாதிரி பயங்கரமான யுத்தத்தினால் தான் உலகத்தின் சரித்திரமே மாறியது."

இவ்வாறு மிஸ்ட்டர் சர்ச்சில் சென்ற யுத்தத்தின் ஸப்மரீன் சண்டையைப் பற்றி கூறியிருக்கிறார். அந்த பயம் இப்பொழுதும் அதே மாதிரியாக இருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம். போன யுத்தத்தில் 2 வருஷங்கள்தான் கட்டுப்படுத்த முடியாதபடி ஸப்மரீன் தாக்குதல் இருந்தது. சென்ற யுத்தம் ஆரம்பித்து 25 மாதங்களுக்குப் பிறகுதான் அது ஆரம்பித்தது. இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்கள் ஒரு காலத்திலும் தயங்கவில்லை. யுத்த ஆரம்பத்திலிருந்தே ஸப்மரீன்களை உபயோகித்து வருகிறார்கள். ஆகையால் நாம் ஸப்மரீன்களை 40 மாதங்களாகத் தாக்கிக்கொண்டு வருகிறோம்.

சென்ற யுத்தத்தில் ஸப்மரீன் தாக்குதலைப்பற்றிய ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால் ஜெர்மனிக்கு எதிராக யுனைடெட் ஸ்டேட்ஸைக் கொண்டுவந்தது, மிகவும் சக்தியுள்ள தைரியமுள்ள தேசமான அமெரிக்கர் ஜெர்மனியின் சத்துருவாக சேர்ந்ததால் வெற்றி கிடைக்க முடியாதபடி ஆய்விட்டது. அவர்களுடைய சக்திக்கு மேல் விரோதிகளை அதிகப் படுத்திக்கொண்டு விடுகிறார்கள். அவர்களுடைய பிரசாரம் எவ்வளவு நன்றாயிருந்த போதிலும், அவர்கள் ராஜ்ய தந்திரத்தில் படித்தவர்களாகத் தெரியவில்லை. தங்களுக்கு எதிராக ஒரு பெரிய எதிர்க்க முடியாத கூட்டு எதிரிகளைச் சேகரித்துக்கொள்ளுகிறார்கள். இதைத் தான் சென்ற யுத்தத்திலும் இந்த யுத்தத்திலும் செய்திருக்கிறார்கள். இரண்டு தடவைகளிலும் அமெரிக்காவை தங்களுக்கு எதிராக கொண்டுவந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் ஸப்மரீன்களைக்கொண்டு தங்கள் தலையிலேயே தாங்களே கொள்ளியைவைத்துக் கொண்டார்கள். இப்பொழுதும் ஜப்பானியர்களைக் கூட்டாளிகளாகக்கொண்டு அதையே செய்து வருகிறார்கள். அவர்கள் தைரியசாலிகள் மிகவும் ஆசைபிடித்தவர்கள். ஆனால் மிகவும் முட்டாள்தனமானவர்கள்.

**ராணுவ காரணங்கள்தான் அவர்களுக்கு முக்கியம்.**—மிஸ்ட்டர் சர்ச்சில் மற்றொரு காரணம் ஜாடையாகச் சொல்லுகிறார். அதாவது ஜெர்மானியர்கள் முக்கியமாக ராணுவ காரணங்களைக் கொண்டுதான் முடிவு செய்கிறார்கள். 1917-ம் வருஷக் கடைசியிலே ஜெர்மானியர்கள் சமாதானம் செய்துகொண்டிருக்கலாம். நேசதேசத்தார்கள் அப்பொழுது அதை வரவேற்பதற்கு ஆலோசித்திருப்பார்கள். அப்பொழுதே சமாதானம் கிடைத்தால், சொல்ல முடியாத துயரத்தை ஜெர்மானியர்கள் தடுத்திருக்கலாம். மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிறார்: "ஜெர்மன் தலைமைக் காரியாலயத்திலிருந்த ஜெனரல் லுடென்டார்ப் ராணுவ விஷயங்களில் மாத்திரமல்லாமல் அரசியல் விஷயங்களிலும் சர்வாதிகாரியாயிருந்தார். யுத்தத்தின் தத்துவார்த்தத்தினால் சக்ரவர்த்தி யுத்த காலத்தில் நடத்தும் ஒரு சாதாரண கருவியாக ஆகிவிட்டார். ஜெர்மனியின் அரசியலானது இங்கிலாந்திலிருப்பது போலில்லை. பிரதிநிதி சபையிலிருந்து தைரியசாலிகள் அதிகாரத்தை அடைந்திருப்பது போல் ஜெர்மனியின் அரசியலில்லை. ராணுவ காரணங்களாலேதான் எல்லாம் கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு சமயத்திலும் தலைமைக் காரியாலயம் தங்களுடைய காரியங்களை சாதித்துக் கொள்ளுகிறது. இந்த பலமான பெரிய கருவியானது ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் பலமாகவும் அழிவுக்குக் காரணமாகவுமிருக்கிறது. அது ஒரு சர்வாதிகாரியாகவே விளங்குகிறது.

ஆகையால் லுடென்டார்ப் சமாதானம் செய்துகொள்ளாமல் யுத்தத்தை நடத்தி வந்தார். யுத்தம் முடிவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பு, லூடென்டார்ப் மான்ஸில் 1917-ம் வருஷம், நவம்பர் மாதம் 11-ம் தேதி நடந்த ஒரு கூட்டத்தில் பேசினர். "பிரிடிஷார் நசுக்கப்பட வேண்டும் என்று அறை கூறினன். 1918-ம் வருஷம் மார்ச்சு 21-ம் தேதி 66 ஜெர்மன் படைகளும், 375 சிறிய பீரங்கிகளும், 279 கனமான பீரங்கிகளும் அதே கனமுள்ள 28 பீரங்கிகளும் மொத்தமாய் 6,200 பீரங்கிகள், 19 பிரிடிஷ் அணிகள் நிறைந்த யுத்த அரங்கத்தில் உபயோகப்படுத்தப்பட்டன. தாக்குதல் கொரேமாயிருந்தாலும் உபயோகப் படவில்லை. "பிரிடிஷ் 5-ம் படை 1,50,000 மனித நஷ்டத்தோடும், 1,000 பீரங்கி நஷ்டத்தோடும் பின்வாங்கிற்றென்றும், அமீன்ஸுக்குப் போகும் மார்க்கத்தில் எவ்வளவு முயற்சி செய்தார் என்றும், ஜெனரல் பிடேயின் பிரிடிஷ் படையுடன் உள்ள சம்பந்தத்தை அறுத்து முழு பிரெஞ்சுப் படையையும் பாரிஸைக் காத்துக்கொள்ள உத்தேசித்ததையும் இருந்தும் அந்த சிறு பிரிடிஷ் அணி உடை படாததையும், எவ்வாறு பிரிடிஷ் வலது பகுதியும், பிரெஞ்சு இடது பகுதியும், நான்கு வருஷங்களாய் சேர்ந்து சண்டை செய்தது போலவே திரும்பவும் சேர்ந்து கடைசி வரையில் வெற்றி பெறும் வரையில் சேர்ந்து இருந்ததும் ஒவ்வொருவரும் அறிவார்" என்று மிஸ்ட்டர் சர்ச்சில் கூறினர்.

### கடைசி அகதிகள்மேல் பிரியம் இல்லை.

இப்பொழுது லூடன்டார்ப் யுத்தம் நடத்துகிருர். ஆனுல் யுத்தம் அவருக்கு எதிரி டையாய் தோல்வி உண்டாக்கியதும் மிகவும் விசனப்பட்டார். ஆகஸ்டு 8-ம் தேதி அவர் படைகள் சின்னுபின்னமாக்கப்பட்டன. அவர்கள் அந்நாளை ஜெர்மன் படைக்கு ஒரு கெடுதலான நாள் எனக்கூறினர். அவருக்கு நடுக்கம் ஏற்பட்டது. ஜெர்மன் சைனியம் நசுக்கப்பட்ட தாக உடனே முடிவுசெய்துவிட்டார் தன் தைரியத்தை முற்றிலும் இழந்தார். உடனே சரணடையவேண்டுமென்று கூக்குரலிட்டார். இது ஒரு பரிதாபகரமான நிலை. ஜெர்மானியர் களுக்குக் கடைசிவரை யுத்தமிட அபிப்பிராயம் இல்லை. அவர்களிடம் ராணுவத்திற்கு விசேஷமான குணங்கள் இல்லை. ஆகையால்தான் அவர்கள் சண்டையில் தோற்றுவிடு கிருர்கள். ஜெர்மனியில் ஹிட்லரின் ஆதிக்கம் நிலைக்கவேண்டும் என்று பூரணமாய் ஹிட்லரை விரும்பி உழைத்தவரும், நேசதேச தளகர்த்தர்கள் வியக்கும்படியாய் உடனே சரணடைந்த வருமான முக்கியமான ஜெர்மன் சைனிய தளகர்த்தர் இந்த லூடன்டிராபேயாவர். தான் சரணடையமாட்டேன் என்று ஹிட்லர் கூறுகிருன். அதுவேதான் ஜெர்மானிய மக்களுக்கும் அவன் கூறுகிறதும். அவன் பழைய ராணுவ சிநேகிதனைக் காட்டிலும் தான் கல் நெஞ்சமு டையவன் என்று நினைக்கிருன். அவ்வீண் பெருமை எவ்வளவு நாள் நிலைக்கும் என்று நாம் கூடிய சீக்கிரம் காணலாம். அதுவரை பொருமையாகவே இருப்போம். நாமும் பார்த்துக் கொண்டிருக்கிருேம்.

அதுபோலவே பிரிடிஷ் பிரதம மந்திரி வின்ஸ்டன் சர்ச்சிலும் காத்துக்கொண்டிருக் கிருர்.

---

## முஸோலினியின் வீண்பேச்சுக்கு பிரிடிஷ் டாமியின் முடிவுரை.

---

வட ஆபிரிக்காவில் 8வது படையுடன் சேர்ந்து முன்னேறிவந்த இந்தியத்துருப்புகள் முஸோலினியின் மின்னல் எதிர்ப்புப் படைகளைக்கண்டு பரிகாசம்செய்ய ஆரம்பித்தார்கள்.

அகம்பாவம் கொண்ட முஸோலினி இதாலியில் ஒரு அடையாள அறிவிப்பு பலகையை நிறுத்தியிருந்தான். அதில் எகிப்துக்குள் இதாலியர்கள் துரிதமாக முன்னேறிவிடுவார் களென்று வரையப்பட்டிருந்தது.

கடைசியாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டுதான் அவர்கள் பரிகாசம் செய்தார்கள். "இதாலியத் துருப்புகள் முன்னேறுவது தடைபடாது" என்று முஸோலினி பெருமையுடன் எழுதியிருந்தான். பிரிடிஷ் டாமி ஒருவன் இந்தச் செய்தியின் முடிவுரையை எழுதினன். இதாலியப்படை பின்வாங்கும்பொழுது என்று முடிவில் சொல்லப்பட்டது.

## ஜப்பானியர்கள் காயமடைந்த நண்பனைக் கொன்றுவிடுகிறார்கள்.

பூதேடாங்குக்கு வடக்கே ஒரு வெடி விமானம் நொருங்கிக் கீழே விழுந்தபொழுது அதிலிருந்து மூன்று ஜப்பானிய விமானிகள் வெளிவந்தார்கள். உயிருடன் எதிரி கையில் அகப்படக்கூடாது என்ற எண்ணத்துடன் காயமடைந்த தங்கள் நண்பனை அவர்கள் கொன்றுவிட்டார்கள்.

டாங்கு பஸார் பிரதேசத்தில் இரண்டு வெடி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஒரு விமானத்திலிருந்தவர்கள் மறித்துவிட்டார்கள். மற்ற விமானத்திலிருந்தவர்கள் பத்திரமாகயிருந்தார்கள். விழுந்த இடத்திலிருந்த ஜனங்களை ஆளைத் தூக்கிச் செல்லுவதற்கு பாடை தயார் செய்வதற்கு தளவாடங்கள் கொடுக்கும்படி கேட்டார்கள்.

பாடை தயாராகிவந்தபொழுது சப்தம் உண்டாகிற்று. நமது துருப்புகள் வந்துகொண்டிருக்கின்றன என்று ஜப்பானியர்கள் நினைத்தார்கள். ஒருவன் உரைவாளை உருவி, காயமடைந்த சிநேகிதனை வயிற்றில் குத்திக்கொன்றான். பிறகு அவர்கள் ஓடிப்போனார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 146. (5-வது பிரிவு.)

| | | | |
|---|---|---|---|
| 15- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 16- 5-43 | திருவரங்குளம் | ... ,, | 7.00 |
| ,, | வம்பன் | ... ,, | 7.30 |
| 17- 5-43 | திருமயம் | ... ,, | 7.00 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 |
| 18- 5-43 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 |
| 19- 5-43 | பொ. புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |
| 20- 5-43 | வெள்ளனூர் | ... ,, | 7.00 |
| ,, | செம்பாட்டூர் | ... ,, | 7.30 |
| 21- 5-43 | புலியூர் | ... ,, | 7.00 |
| ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 147. (1-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 22- 5-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 |
| 23- 5-43 | கீழாநிலை | ... ,, | 7.00 |
| ,, | கீழாநிலை புதுப்பட்டி | ... ,, | 7.30 |
| 24- 5-43 | பெருமாநாடு | ... ,, | 7.00 |
| ,, | புல்வயல் | ... ,, | 7.30 |
| 25- 5-43 | சடையம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, | 7.30 |
| 26- 5-43 | மலைக்குடிப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | துலையானூர் | ... ,, | 7.30 |
| 27- 5-43 | மலம்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | பேராம்பூர் | ... ,, | 7.30 |
| 28- 5-43 | ஆலவயல் | ... ,, | 7.00 |
| ,, | அம்மன்குரிச்சி | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 15— 5—43 | திருமயம். |
| 16— 5—43 | தீத்தான்விடுதி. |
| 17— 5—43 | அரிமளம். |
| 18— 5—43 | பேராம்பூர். |
| 19— 5—43 | கரம்பக்குடி. |
| 20— 5—43 | கீழாநிலை. |
| 21— 5—43 | புதுக்கோட்டை. |
| 22— 5—43 | வெட்டம்விடுதி. |
| 23— 5—43 | மருதன்கோன்விடுதி. |
| 24— 5—43 | முள்ளங்குரிச்சி. |
| 25— 5—43 | கோனாபட்டு. |
| 26— 5—43 | ராயவரம். |
| 27— 5—43 | குழிபிரை. |
| 28— 5—43 | புதுக்கோட்டை. |

# எதிரியின் யுத்தக் கப்பல்கள், சுரங்கவெடிகள், சுரங்க வெடிபாவுதல் இவைகளைப்பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு வெகுமதி.

சமுத்திரத்திலோ, அல்லது கடற்கரையிலோ, இருக்கும் எதிரியின் யுத்தக் கப்பல்கள், சுரங்கவெடிகள் பாவுதல், சுரங்கவெடிகள் இவைகளைப்பற்றி உபயோகமுள்ளதும் வாஸ்தவமுமான தகவல்களைக்கொடுக்கும் பொது ஜனங்களுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் பின்வருமாறு பரிசுகள் வழங்குவதாக வெளியிட்டிருக்கிருர்கள்.

| | தொகையில் உத்தம பரிமாணம். |
|---|---|
| தென்பட்ட உடன்காலத்தில் தகவல் கொடுத்து அதன் மூலம் எதிரியின் முக்கியமான யுத்தக் கப்பல், பிடிபட்டாலும் அல்லது நாசமடைந்தாலும் ... | ரூ. 12,500 |
| எதிரியின் யுத்தக் கப்பல்களின் நடமாட்டம், நடவடிக்கை, சுரங்கவெடி பாவும் வேலை, இவைகளைப்பற்றி சரியான, உபயோகமுள்ள தகவல் கொடுப்பவர்களுக்கு ... ... ... ... | 600 |
| எதிரியின் சுரங்கவெடிகள் மிதந்தாலும், கரையில் ஒதுங்கினாலும், அல்லது பாரசூட் மூலம் சுரங்கவெடிபாவினாலும், அல்லது போக்குவரதுக்கு லாயக்கான நதிமார்க்கங்களில் பிரிடனுடைய சுரங்கவெடிகள், விமானங்களிருந்து வீசப்படும் சுரங்கவெடிகள் இருப்பதைப்பற்றியும் முதலில் தகவல் கொடுக்கும் நபருக்கும் கப்பலுக்கும் ... ... ... | 60 |
| பிரிடனுடைய அல்லது எதிரியினுடைய சுரங்கவெடி கரையில் ஒதுக்கப்பட்டு கைப்பற்றியதைப்பற்றி முதலில் தகவல் கொடுப்பவருக்கு ... | 12 |
| மேற்சொல்லிய சுரங்கவெடி நூதனமாகவும், சிலாக்கியமான வகுப்பைச் சேர்ந்தகாகவுமிருந்தால் ... ... ... | 60 |
| மிதப்புகளையும், சுரங்கவெடி நாசம் செய்யும் கருவிகளையும், சுரங்க வெடித்துணுக்குகளையும், அல்லது எதிரிக்கு சொந்தமான இதர வஸ்துக்களையும், கைப்பற்றி அவைகளும் புதியதினுசுகளாகவும், அல்லது புதிய தகவல்கள் கொடுக்கிறதாகவுமிருந்தால் ... ... | 60 |

பரிசுத்தொகையின் உத்தமபரிமாணத்துக்குட்பட்டு, கொடுக்கப்பட்ட தகவலின் மதிப்பையொட்டி எவ்வளவு தொகை பரிசளிப்பதென்று இந்திய அரசாங்கத்தார் நிர்த்தாரணம் செய்வார்கள். ஒரு கப்பலிலுள்ளவர்கள் தகவல் கொடுத்தால், கப்பலிலுள்ள எஜமானனும் கப்பலில் வேலை செய்பவர்களும் பரிசை எவ்விதம் பகிர்ந்து கொள்ளுகிறதென்றும் இந்திய அரசாங்கம் தீர்மானம் செய்துவிடுவார்கள்.

தகவல்கள், சமீபத்திலுள்ள கடற்படை அதிகாரிகளிடமோ, துறைமுக அதிகாரிகளிடமோ, கடற்கரை பாதுகாப்பாளரிடமோ, சுங்கவரி வசூலிக்கும் ஆபீஸரிடமோ, அல்லது போலீஸ் உத்தியோகஸ்தரிடமோ அறிவிக்கப்படவேண்டும். பூராத் தகவல்களும் கொடுபடவேண்டும். காலம், தேதி, சன்னிவேசம், எதிரியின் யுத்தக் கப்பலாகயிருந்தால் அதன் பெயர், விபரம், செல்லும் மார்க்கம், வேகம், போன்ற எல்லா விபரங்களும் அனுப்பப்படவேண்டும். சாத்யமானவரையில் தகவல்களை எழுத்து மூலம் அனுப்பவேண்டும். எந்நிலைமையிலும் காலஹரணம் செய்யக்கூடாது.

## முக்கியமான எச்சரிக்கை.

பொது ஜனங்களும் அதிகாரம் பெருதவர்களும், கடற்கரையில் ஒதுங்கியிருக்கும் சுரங்கவெடிகளுக்கு சமீபத்தில் செல்லுவது அல்லது அவைகளைக் கையாடுவது போன்ற செய்கைகளில் பேராபத்து இருக்கிறதென்று, இதன் மூலம் எச்சரிக்கப்படுகிருர்கள்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—18-5-43.